KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

AYYER LIBRARY
Dr. U.V. SWA...
TIRUVANMIYU...

Vol 4] 1931 ஆம் ஜனவரி மீ 8உ [No. 1.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 1
2. அப்பர் (வைத்தியம்)
   E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 3
3. சூளாமணி (உரையுடன்)
   T. N. சேஷாசலம் B.A., B.L. 6
4. யாப்பிலக்கணம் 8
5. மானத சாத்திரம் (உணர்வு)
   T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 9
6. கம்ப ராமாயணம் (கைகேசி சூழ்வினைப் படலம்)
   T. N. சேஷாசலம் B.A. B.L. 12
7. பெரிய புராண நுட்பம்
   கதிரேசன் செட்டியார். 14
8. ஞான மொழிகள் (க. வேலுப்பிள்ளை) 15
9. வர்த்தமானம் 19

தனிப்பாடல்.

நவாலி. கா. சோமசுந்தரம் பிள்ளை.

நாமகள்

எழுத்தெல்லா முடலாகச் சொற்க ளுறுப்பாக
 ஏத்துமகப் பொருளுயிராய்ப் புறங்கருவி யினமாய்
வழுத்துகின்ற பாவியலே மாசி லுடையாக
 வருகின்ற வணியியலே யணியிழைக ளாக
பழுத்தொழுகு கவிச்சுவையே பணிமொழி யதாகப்
 பகருமொரு நாலுவிதப் பயனுயிர்கட் கருளி
அழுத்தமுறு மின்பநெறி தமிழகத்துத் தழைப
 அரசுபுரி தமிழணங்கை யங்கைமுகிழ்ப் பாமே.

முருகன்.

அஞ்சு முகத்தவர் கொஞ்சி முகந்திடு மாறுமுகப் பதுமம்
 அத்தி முகத்தர் மனத்தி னினித்திடு மாறிருகண் வேழம்
கொஞ்சு மொழிக்குற வஞ்சிமுலைக்கிரி கொண்டுழுதிடுகுவடு
 குஞ்சரிசஞ்சரிகந்தொடர் மஞ்சரி கொண்டணையண்டர்தரு
செஞ்சரணஞ் சரணென் றுலகந் துதி தேவிமனைக் குழவி
 தேவர்கள் முடிமணி யசுரர்க ளடிபணி தீரகுமார சிவம்
நெஞ்சினிலென்று நிறைந்தொழி தந்திடுநீலமயிற் கதிரோன்
 நேரலர் தமையடு வேலாயுத மெமைநின்று புரந்திடுமோ.

கலாநிலயம்

புரிமுகம்

மதித்தேம்மை வரவேற்க நிற்குமிந் நான்காம் ஆண்டின் நல்வாயில் இனிதின் இன்று மிதிக்கின்றோம். உவந்தெம்மைத் தொடர்ந்துவரும் கேண்மையோர்க்கு யாம் வழித்துணையாய் வழங்கிய மொழிகள் பற்பல. "அறிவுமிக உடையேம் யாம் ஆதலின் எம் சொற்களை வேதமெனக் கொள்மின்" என்று விதிக்கும் துணிவேனும் நினைவேனும் பெற்றளேம் அல்லேம். யாதும் அறியோம் என்ற அறிவு நம்மனோர்க் கெய்தினால் அதுவே சாலும் என்ற பணிவினை மூன்றாம் ஆண்டின் முதலில் வரைந்த "அறியாமை வேண்டப்படுமே" என்னுந் தலையங்கங்கள் தெரியக் கூறும். அறியாமையின் அளவினை அறியாத கொடுமையே சுயநயமென்னும் உருவுகொண்டு உலவிவருகின்றது. பிறர்நலம் பேணுந் தொழில்கள் பலவற்றிலும் உறைந்துகிடக்கின்றது இவ் வறிவுபோன்ற அறியாமை. தனக்கே நல்லது யாதென அறிந்துகொள்ளல் அருமையென்ப துணராமல் பிறர்பொருட்டு "உடல் பொருளாவிகளை" அளிக்கவருவோர் எங்நலம் பயக்கவல்லார் என்னுமொரு ஐயத்தால் "சுயநலச் சோதனை" என்னுந் தலையங்கங்கள் எட்டு வரையலாயினேம். இதன்பின் வந்த தலையங்கங்கள் பெரும்பாலும் இக்கருத்தையே தழுவினவாகி, இக்காலத்தில் நிகழ்கின்ற இயக்கங்களிலும் வாழ்க்கைமுறைகளிலும் உலகவியாபாரங்களிலும் மாந்தரால் அறியப்படாது கிடக்கின்ற உண்மைகள் எத்தனை இருக்கின்றன என்பதைக் காட்டிப்போந்தன. அவைகளைத் தான் அறிந்துவிட்டால் அறிவாளிகள் ஆகிவிடலாமோ என்னின் அதுவுமன்று. அறியாதனவாகிய

இவைபோன்ற பின்னும் பல உண்மைகள் இருத்தல் வேண்டும் என்ற நினைவு எய்துதற்கே அவை உதவும்.

அறியாமையை மறந்திருக்கும் எம்மையை அறிவென்று கொண்டாடும் கைதவம் ஒருபுறமிருக்க, வெறுத் தகற்றவேண்டிய சூழ்ச்சித் தந்திரங்களை ஆற்றல்சால் அறிவென்று பிழைசெய்யும் வஞ்சனையையும் ஓர்தல்வேண்டும். இதனை "முயலுக்கு முயல வேண்டா", "சகுனியின் மரபுதான் சாய்வதில்லையோ", "மால்வோலியோவின் மரபும் மாய்ந்ததில்லை" அனைய தலையங்கங்களில் காட்டிவந்தோம். பற்பல சாதிக்கவல்ல சாமர்த்தியசாலிகளிலும் ஒன்றுமறியாச் சாதுக்களே கடவுளின் கருணைக்குரிய பாக்கியசாலிகள் என்பதை நினைவுறுத்துமாறு யாம் செய்த முயற்சியைத் தாங்கியிருக்கின்றன சில தலையங்கங்கள். இந்தச் சத்துவ குணம் நிலைக்காவண்ணம் அலைக்கின்ற சில இயக்கங்களின் தன்மையை ஆங்காங்கே, "பெரும்பாலோர் பிழை", "பேயச்சில் பிள்ளையாரோ" போன்ற தலையங்கங்களில் ஆராயவேண்டி நேர்ந்தது. "யாதேனும் அறியாத வெறும் துரும்பனேன்" என்று தாயுமானவரே அடங்கிநிற்க எல்லாம் அறிந்தவர்போல் நடிக்கின்ற மாந்தர்களின் சிறுமையை உணர்வதற்கொரு கருவியாய்ப் "பெருமையின் பெருமையை" விளக்கிய இரண்டு தலையங்கங்களோடு மூன்றும்வருடம் முடிந்தது. இந்தச் சாத்துவிகநிலை சேர்வது அரிதினும் அரியதேனும் பெறற்குரிய பேறு வேறில்லை. கடவுளின் கருணையாலன்றி அது கைவருதற்கும் இயலாது. பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை என்பதெல்லாம் பொய்—அருளிலார்க்கு அவ்வுலகமன்றி இவ்வுலகமுமில்லை என்பதொன்றே மெய். வானமாய் நின்றுஇன்ப மழையாய்ச் சொரியும் தனிப்பெருங் கடவுளின் அருளினைமுகந்துகொண்டுஅதனையே மீண்டும்அயலார்க்கு உதவுமாறு பாய்ச்சிவிடுமொரு நல்லாற்றின் பெருமைக் கிலக்காயிருக்கின்ற உயர்வினை மறந்தும் இகழ்ந்தும், பொருளால் பொலிவதுபோல் காண்கின்ற போலித்தோற்றங்களுக் கடிமையாகிவருகின்ற இக்கால உலகத்தின் நிலைகண்டு இரங்காமல் வேறுவேறு உரிமைகளால் விடுதலையடைவதென்னும் பேய்த்தேரைக் கைகாட்டிக்காட்டி விரைந்திரைந்து முடுக்குகின்ற கொடுமைகள், இந்நாள் பொதுத்தலங்களில் கழறப்பெறும் தத்துவமொழிகள்போன்ற சில வாக்கியங்களுக்கிடையே அங்கங்கு விரவிக்கிடப்பதால், அவ்வாக்கியங்களை யெல்லாம் கொண்டுகூட்டிப் பொருள்கொள்ளப் பயினுமாறு, "தர்க்கத் தளர்ச்சி", "விடயத்திற்கேற்ற விளம்பரம்" போன்று யாம் வரைந்துள்ள தலையங்கங்கள் பயன்படும்.

இனிவரும் தலையங்கங்கள்எத்திறத்தினவாயிருக்குமென்பதை இன்று ஒருவாறு குறித்துவைப்பது எம் கடன். இதுகாறும் இம்மூன்று ஆண்டுகளாக யாம் இயம்பிவந்தன மானுட மனப்பான்மையை ஆங்காங்குப் பின்பற்றி மனத்துள்நிகழும் அகவுலகத்திற்கும் புறத்தேபுரியும் புறவுலகத்திற்கும் விளைகின்ற முரண்களை உட்கொண்டு இருந்தனவாயினும், இனி வருவன பெரும்பாலும் மனத்துள் இயங்குகின்ற விகாரங்களுக்கும் அவ்விகாரங்களைத் தூண்டி வைக்கும் ஐம்பொறிகளுக்கும், ஐம்பொறிகளாற் றூண்டப்பட்ட விகாரங்களை மதித்து ஆள்கின்ற புத்திக்கும், இம்மூன்றினையும் முழுமையாய்த் தழுவிக்கொள்ளும் கலைகளுக்கும் உள்ளதோர் அருமையாய தொடர்பினைச் சிந்தித்தும் ஆராய்ந்தும் செப்புவனவாகும். அவைகளின் கருத்துக்களைஐயமறத் தேர்ந்துகொள்ள விரும்புவோர் முன்னாண்டு இவ்விதழ்களில் தொடக்கமாகி இவ்வாண்டில் முற்றுப்பெறவிருக்கும் மானத சாத்திரத்தை நன்கு ஓதிவைத்துக்கொள்ளல் நலம்.

கலையினது இலக்கணம் ஆயிரம் கூறினும், கலைநூல் இலக்கணம் ஆயிரம் கேட்டாலும், அது கலைப்பொருள் ஒன்றைத் துய்த்துமகிழ்வதற் கிணையாகாது. அத்தகைய பொருள்களில் ஒன்று சூளாமணி. சிறந்த காவியங்களுள் ஒன்றாய இந்தநூல் விலைக்குக்கிடைப்பது அரிதாய்க்கிடப்பதாலும், யாம் அறிந்தவரையில் இதுகாறும் யாவரும் அதற்கு உரையெழுத முயன்றிலராதலாலும் யாம் அதனை உரையோடு இவ்விதழ்களில் வரைந்துவைக்க முன்வந்தோம். எம் வாசகர்களிற் பலர்க்கு இது மிகவும் உகந்ததா யிருக்குமென்பது எங்கள் துணிவு. சொல்நயமும் தொடையினிமையும் செய்யுளோசையும் கனிந்த இப்பாசுரங்கள் தங்கியமனத்தைத் தன்வயப்படுத்தித் தூய்மையாக்கும் பெருமையால் கம்பரது நூலிற்கு இணையோ என மதிக்கநினைப்பார் இலராகார். அக்கம்பரது காவியமும்,முன்னைப்போலவே இவ்விதழ்களில் வரையப்பெற்று வரும். பாலகாண்டம் முதலிரண்டாண்டுகளில் முடிந்ததுபோலவே மூன்றும்ஆண்டில் தொடங்கிய அயோத்தியாகாண்டமும் இவ்வாண்டில் முடியலாம் என நினைக்கின்றோம்.

ஆங்கிலமொழியின் அருங்கலைச்சிறப்பைத் தாங்கிய மேனாட்டுக் கவிகளுள் முதலெனப் போற்றப்பெறும் ஷேக்ஸ்பியரின் நாடகம் ஒன்று மொழிபெயர்ந்து, அதனருமையை விளக்குதற்குரிய விரிவுரையுடன், இவ்வாண்டில் இவ்விதழ்களில் வருவதற்கான முயற்சிகளைச்செய்துகொண்டிருக்கின்றோம். இலக்கியச்சுவை வாய்ந்த இன்னியல் நாவல் ஒன்றும் வரையப்பெறினும் பெறலாம். இவ்வாண்டில் யாப்பிலக்கணம் ஆரம்பமாகும்.

அப்பர்

அப்பரும் அறுபத்தினன்கு கலைகளும்.

16. வைத்தியம்.

[3-வது வால்யூம் 987-வது பக்கத் தொடர்ச்சி]

(i) தமிழ் நாகரிகமும், தேகசுகமும், சைவ சமயமும்.

இதுகாறும் சிற்பமும் அதனுள்ளடங்கிய ஓவியம் முதலியனவும் அப்பர் அறியாதவரல்லரென்பதற்குப் பல தேவாரப் பாசுரங்களைக் கண்டோம். அவற்றுள் சில, நமது தென்னடு அப்பர்காலத்தில் எவ்வாறு விளங்கிய தென்பதைப் புகைப்படம்பிடித்து வைத்ததுபோல் காட்டுகின்றன. மாடமாளிகைச்செல்வம், நீர்வளம், நிலவளம், இயற்கை வனப்பு, பல்வகைப் பறவைகள், மிருகங்கள், மரங்கள், பூக்கள், அருவிகள், ஆற்று வெள்ளங்கள் முதலிய காட்சிகளைப் பற்பல பதிகங்களாற் கண்டோம். இவ்வாறு இயற்கை பரிசுத்தமாயும் அழகாயும் விளங்கிய காலத்திலும் மனிதர்களின் தேகதத்துவம் சிவபக்திநிறையாவிடங்களில் வியாதிகளால் பீடிக்கப்பட்டிருந்ததென்பதற்கு ஐயுறவில்லை:—

திருக்கோயி லில்லாத திருவி லூருந்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடி பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும்
விருப்பொடு வெண்சங்க மூதா வூரும்
விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்
அருப்பொடு மலர்பறித்திட் டுண்ணா வூரும்
அவையெல்லா மூரல்ல வடவி காடே!

திருநாம மஞ்செழுத்துஞ் செப்பா ராகிற்
றீவண்ணர் திறமொருக்கால் பேசா ராகில்
ஒருக்காலுந் திருக்கோயில் சூழா ராகி
லுண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின் றாரே.

தனித் திருத்தாண்டகம் 5, 6.

திருக்கோயிலிற் செய்யவேண்டிய திருத்தொண்டும் அதன் வழிப்பாட்டிற் குரியநியமங்களும், திருக்கோயிலிற் காணப்படும் ஒவ்வொரு பண்டமும் தேகத்திற்கு ஆரோக்கியத்தையும் திடசக்தியையும் தருவதுடன் யாதொரு வியாதியும் வாராது தடுக்கும். பிணியாளன் அவ்விடம் பக்தியுடனும் உள்ளன்புடனும் செல்வானகின் அக்கணமே, தீப்பிணியாவும் நீங்கப் பொன்னனைய திருமேனி பெறுவன். இக்கருத்தையே, அப்பர் "திருக்கோயிலில்லாத திருவில் ஊர்" காடு என்றார். ஏனெனில் அவ்வூரில் வசிப்பதால், காட்டில் வசிப்பதுபோல் எவ்வியாதி சம்பவத்திற்கும் இடங்கொடுப்பா னென்பதும் அவர் கருத்தாம். சர்வ வியாதி நிவாரணசக்தி பெற்ற திருநீற்றை மேனியில் தரிக்காமலிருப்பது வியாதியுண்டாவதற்கு ஒரு வழியாகும். இக்காலத்தில் மேல்நாட்டிலும் தேக சௌக்கியத்திற்குப் பொடிகள் அணிவதுவழக்கமாயிருக்கின்றது. ஸ்நானத்திற்குப்பின் பொடி, க்ஷவரத்திற்குப்பின் பொடி, தலைப்பொடி, முகப்பொடி, உவர்ப்பொடிமுதலிய பொடிகள் ஆங்கிலேயர்களால் செய்யப்பட்டு நமது கச்சவடங்களில் வழங்குவதும் காண்கின்றோம். இப்பொடிகள் வாங்குவோர் மனதைக் கவருமாறு வாசனைச்சரக்குகள் கலக்கப்பட்டிருப்பதையும் காண்கின்றோம். ஆயினும் இப்பொடிகள் திறந்தபின் உபயோகப்படாது சிலகாலம் வைக்கப்படின் கிருமிகள் உற்பத்திக்குத் தக்க ஸ்தலமாகும். இதை மறைப்பதற்கோ, அல்லது தடுப்பதற்கோ, வாசனைகள் அப்பொடிகளில் வியாபாரிகள் கலப்பார். இதை நவீனநாகரிகத்தில் இருபாலரும் ஏற்று மகிழ்கின்றனர்! அந்தோ!

நமது தமிழ்நாகரிகத்தில் எக்காலத்திலும் ஒரே குணமாயும், பூசப்பூசப் பொன்னிறம் நமது உடலுக்குக்கொடுக்கத்தக்கதும், பூசவினியதும், சுந்தரமாவதும் புகலிவேந்தர் திருநீற்றுப் பதிகத்திற் பகர்ந்த நற்குணங்கள்யாவும் ஒருங்குவாய்ந்து சுவல்ப விலையில் அல்லது இலவசத்தில் கிடைக்கக்கூடியதுமான திருநீறு நமது வர்த்தகஸ்தலங்களிலுள்ள மேல்நாட்டுப் பொடிகளை யொழித்திட்டு என்றுபுகுமோ வறியோம். ஆயினும், அப்பர்காலத்திலும் நமது மேல்நாட்டுப் பொடிகளைப்போல் சாஸ்திரநிபுணர்களான திகம்பர சமணர்களும் செய்து தாங்களு மணிந்து பிறரையு மணிவித்தனரென்பது தேவாரத்தில் காண்கின்றோம்.

இத்தகைய பொடிகள்யாவும் விஷப்பொடிகளே. உடனே மனிதரைக் கொல்லாவிடினும், நாளடைவில் தேகத்திற்கு நன்மை விளைக்கா. வாகீசர் கூறியவாறு இப்பொடிகள் கடுப்பொடியாகும்:—

கடுப்பொடி யட்டி மெய்யிற்
கருதியோர் தவமென் றெண்ணி
வடுக்களோ டிசைந்த நெஞ்சே!
மதியிலீ! பட்ட தென்னே?
மடுக்களில் வாளை பாயும்
திருவையா றமர்ந்த தேனை
அடுத்துநின் றுன்னு நெஞ்சே!
யருந்தவஞ் செய்த வாறே.

திருவையாறு - திருநேரிசை - 5.

சிவபெருமானை "அடுத்துநின்று உன்னல்" யாதெனின்,

புலன்களைப் போக நீக்கிப்
புந்தியை யொடுங்க வைத்து
இனங்களைப் போக நின்றி
ரிரண்டையு நீக்கி யொன்றாய்
மலங்களை மாற்ற வல்லார்
மனத்தினுட் போக மாகிச்
சினங்களைக் களைவர் போலுந்
திருப்பயற் றூர னாரே.

திருப்பயற்றூர் - திருநேரிசை - 9.

இவ்வாறு சித்தசுத்தி பெற, அக்கு (உருத்திராட்சம்), பஞ்சாட்சரம், திருநீறு இன்றியமையாத்துணைக் கருவிகளாம் - இவற்றை மணி மந்திர ஔஷத

மென்பர் மேலோர் - இவற்றைப் பெற்றுச் சிவபெருமான் திருப்பூசைக்குரிய தேனுடை மலர்களும், வில்வம் முதலிய பத்திரங்களும், தூப (சாம்பிராணி குங்கிலியம்), தீபப் (கர்ப்பூரம்) பொருள்களும் ஏந்தி விதிமுறைப்படி நித்தியம் பூசனையிற் சிறிதுநேரம் கழித்துப் பிறகு தங்கள் தொழில்களுக்குச் செல்லுவோர் நோயற்றவாழ்வும் குறையற்ற செல்வமும் பெற்று விளங்குவர்.

"மாதினையோர் கூறுகந்தாய் ! கறைகொ ணாவா !
மதிசூடி ! வானவர்க டங்கட் கெல்லா
நாதனே !" யென்றென்று பரவி நாளு
நைந்துருகி வஞ்சகமற் றன்பு கூர்ந்து
வாதனைபான் முப்பொழுதும் பூநீர் கொண்டு
வைகல் மறவாது வாழ்த்தி யேத்திக்
காதன்மையாற் றொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே

திருக்கன்றாப்பூர் - திருத்தாண்டகம் !

நசையானை நால்வேதத் தப்பா லானை
நல்குரவுந் தீப்பிணிநோய் காப்பான் றன்னை
யிசையானை யெண்ணிறந்த குணத்தான் றன்னை
யிடைமருது மீங்கோயு நீங்கா தேற்றின்
மிசையானை விரிகடலு மண்ணும் விண்ணு
மிருதியும் புனலெறிகாற் றாகி யெட்டுத்
திசையானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே.

திருவானைக்கா - திருத்தாண்டகம் 6

எனவே தமிழ் நாகரிகமானது சைவசம்பந்தமாயும் தேகசுகத்திற்கு யாதொரு . தீங்கிழைக்காததாயும் அப்பர் காலத்தில் விளங்கியது. ஆகையால் வைத்தியம் சைவரன்றி ஏனையோருக்கே வேண்டியதாயும் சைவருக்கு வைத்தியம் சிவத்தொண்டே * போதுமானதெனவும் தேவாரத்தில் விளக்கப்படும்.

(ii) உடலுக்குச் சித்தி உயிருக்கு முத்தி.

"அரிது, அரிது, மானிடராதலரிது" என்ற ஔவையார் திருவாக்கின்படி மனிதராய்ப்பிறப்பது மிகவும் அரிது. "இப்பிறவிதப்பினால் எப்பிறவி வாய்க்குமோ" என்று தாயுமானவர்போன்ற மகான்களும் ஏங்கினரென்றால், நம்போன்றவர்களுக்கு யாதும் சொல்லுவது † அநாவசியமே. ஆயினும் இக்காயம் தினைத்துணை பொறையிலாது உயிர்போகக்கூடிய காயமாதலால், 'இதை வெகு பத்திரமாய்க் காப்பாற்றி இதனால் அழியா முத்திபெறல் வேண்டும். மறு சன்மத்தில், அல்லது இறந்தபின் கிடைக்குமென்று எண்ணப்படும் முக்தியைச் சைவர் ஒருபொருட்டாய் எண்ணார். இம்மையிலே கைவல்யமாகும் முத்தியே நம்மவரால் மதிக்கப்பட்டதாம். அதைச் சீவன்முக்தி யென்றும் அவ்வாறு அடைந்து உலகத்தில் (புளியம்பழத்தில் ஓடுபோல்) பற்றற்று உலாவுவோரைச் சீவன்முக்தர் எனவும் மேலோர் பகர்வர்.

இத்தகைய ஜீவன் முக்தியடைவதற்குக் கருவி யாது? கல்வி யென்பர் சிலர். அருளென்பர் சிலர். அறம் என்பர் சிலர். இவையாவும் உண்மையாயினும் அடிப்படையாய் உதவுவது நல்வினையாற்பெற்ற நமது தேகமே. இதை, நரை திரை மூப்பு வாராது காப்பதற்கு நமது முன்னோர்களான சித்தர்கள் பல முறைகளை ஏற்படுத்தினர். அவை ஒருசார்பு நோக்கின் வைத்தியசாஸ்திர மெனப்படும்; மற்றொரு சார்பு நோக்கின் யோகாப்பியாசமெனப்படும். அஷ்டாங்க யோகங்களும் அவற்றை அப்பர் குறிப்பிடும் பாசுரங்களும் பின்னே கூறப்படும் யோகக்கலையில் விவரிக்கப்படும். ஆயினும் இராஜயோகம், ஹடயோகம் என்னும் இருவகை யோகங்களுக்கும் பொதுவாகிய உயிர்ப்பு-ஆட்சி, தேகசுத்தி யில்லாதவர்களுக்குக் கிடைத்தல் முடவனுக்குக் கொம்புத்தேன் என்னலாகும்.

ஆகையால் சமாதிநிலை பொருந்துவதற் காயினும் சரி, அணிமா முதலிய அஷ்டாமா சித்திகள் பெறுவதற்காயினுஞ் சரி, முத்திரைகளில் ஆழ்ந்து இடைவிடாது பலநூற்றாண்டுகள் இன்பம் அநுபவிக்கவேனுஞ் சரி, முதலில் தேகத்திலுள்ள தத்துவங்களின் அசுத்தங்களைப் போக்கவேண்டும். காமவாழ்க்கையில் உழல்வோருக்கு எதுவும் சித்தியாகாது:—

பிணிகொள்வர், குழற் பேதையர் காதலால் :
பணிகண் மேவி பயனில்லை பாவிகாள்!
அணுக வேண்டி லரனெறி யாவது
நணுகு நாத னகர்திரு நல்லமே.

திருநல்லம் - திருக்குறுந்தொகை - 3.

வேலை வென்றகண் ணாரை விரும்பிநீர்
சீலங் கெட்டுத் திகையன்மின் பேதைகாள்!
காலை யேதொழும் காட்டுப்பள் ளியுறை
நீல கண்டனை நித்தம் நினைமினே.

திருக்காட்டுப்பள்ளி - திருக்குறுந்தொகை - 8.

பிணிவருவதாலும் சீலங் கெடுவதாலும் தேகத்தில் வியாதி சம்பவிக்கும். சீலங்கெடுதல் எப்படியெனின்:—

பொல்லாத வுணவினாற் பொல்லாத
தேசத்திற் போகை தன்னாற்
பொல்லாத காலவிவ காரத்தாற்
செய்தொழில்கள் புரிபொல் லாப்பால்
பொல்லாத கயவருறு கூட்டத்தாற்
பொல்லாத பொருளெண் ணத்தாற்
பொல்லாத விச்சையாற் பொல்லாத
வெண்ணிக்கை பொருந்தல் தன்னால்

ஞான வாசிட்டம்.

இத்துணைக் காரணங்களானும் ஏனைய உரையிற் கோடற்குரிய பற்பல துர்காரியங்களாலும் மனிதர்

---

* தொண்டலாற் றுணையுமில்லை தோலலா துடையுமில்லை
கண்டலா தருளுமில்லை கலந்தபின் பிரிவதில்லை
பண்டைநான் மறைகள்காணாப்பரிசினனென்றென்றெண்ணி
அண்டவா னவர்க ளேத்து மையனை யாற னார்க்கே.

திருவையாறு - திருநேரிசை 4.

† இம்மை யம்மை யெனவிரண் டும்மிவை
மெய்ம்மை தானறி யாதுவி ளம்புவார்
மெய்ம்மை யால்நினை வார்கடம் வல்வினை
வம்மின் றீர்ப்பார்கண் டீர்வன்னி யூரரே.

திருவன்னியூர் - திருக்குறுந்தொகை - 4.

* இதுபெற்றோம் ஈதில்லை யென்னுமவ
தானத்தா லிறுகு மோகம்;
அதுமெத்த வுண்டாக மழைநாளிற்
செறிபனிபோ லாதி துன்னும்;
முதிரிச்சை வெளியாகி மூர்க்கபா
வனைசால முற்றும் போதில்
விதியுற்ற தொழிலன்றித் தீத்தொழில்கள்
செய்தலினால் வியாதி யுண்டாம்.

ஞானவாசிஷ்டம்.

சிலங்கெடும். நோன்பு செறிவு அறிவென்னு மிவை நாற் படியாம். இப் படிகளி லேறுவோன், வியாதி யென்னும் வினையாற் றன்புறான்.

இவ்வாறு ஏறுதவன் மனதை ஒருவழிப்படுத்தச் சக்தியற்றதுபோல் தேகத்திலுள்ள வெளிப்படைத் தத்துவங்களையும் தன்வயமாக்கத் திராணியின்றி வருந்துவன். நாடிகளின் கணுக்கள் வெளி சிறுக்கும்; அல்லதுபெருகும்.பிராணவாயு ஒருசமமாப்ப்பாயாது. உடல் அதனால் (Symmetry) தொந்தநிர்ணயம் நிலைகுலைந்து சிதறலுறும். இதனால் அவயவங்களில் ஆங்காங்குக் கெட்டநீர் தங்கி வியாதிகளைப் பலவாறு கிளைக்கச் செய்யும். ஆகையால் நீதிமார்க்கத்தில் ஒழுகாதவன் தேகத்திற்குச் சுகக்கேடின்றிப் பலகாலம் வாழ்வ தரிது.

சலனமற்று நிற்கும் மனமே தேகசௌக்கியத்திற்கு இன்றியமையாதது. மேல்நாட்டுச் சாஸ்திரிகளும் (Mens Sano Corpore Sano) உடல் சரியாயிருந்தால்தான் மனமும் சரியாயிருக்கு மென்பர். வியாதியுடையவன் மனது கலங்கும். அக்கலக்கமே அவ்வியாதியை வளரச்செய்யும். இவ்வாறு ஒன்றால் ஒன்று கெட்டு, இரண்டும் முடிவிற்கெட்டு மனிதன் மாள்வன். இதைத்தடுப்பதற்கே நமது மேலோர், சரியை,கிரியை யோகம் ஞானம் என்பன ஏற்படுத்தினர். சரியை கிரியை, யின்றி யோகம் நிலைக்காது. யோகமின்றி ஞானம் வெறும் பேச்சாம். ஆயினும் சரியை கிரியை நடத்துவதற்கும் சற்று ஞானஉணர்ச்சி வேண்டும். இன்றேல் முறைப்படி யவற்றை நடத்துவதில் அயர்வுதோன்றும்; சோம்பலும் நேரும். அதை நீக்குமாறு பெருமானை யடிக்கடி சிந்திக்க வேண்டும். இதை அப்பர் அடியிற் கண்ட பாசுரத்தில் வெகு அழகாய் விளக்குவதைக் காண்க:—

செறிவிலேன் சிந்தை யுள்ளே
சிவனடி தெரிய மாட்டேன்
குறியிலேன் குணமொன் றில்லேன்
கூறுமா கூற மாட்டேன்
நெறிபடு மதியொன் றில்லேன்
நினையுமா நினைய மாட்டேன்
அறிவிலே னயர்த்துப் போனே
னாவடு துறையு ளானே.

திருவாவடுதுறை-திருநேரிசை 7.

சிவபெருமானை இடைவிடாது சிந்திப்பதால் அவனருள் உண்டாகும். அதனால் மற்றவை யாவும் விளையும்.

ஞாலமு மறிய வேண்டி னின்றென வாழ லுற்றீர்!
காலமுங் கழிய லான கள்ளத்தை யொழிய கில்லீர்
கோலமும் வேண்டா வார்வச் செற்றங்கள் குரோத நீக்[கிச்
சீலமு நோன்புமாவார் திருச்செம்பொன் பள்ளி யாரே.

திருச்செம்பொன் பள்ளி - திருநேரிசை 6.

குரோதம்முதலியன நீங்கிச் சிலமும்நோன்பும்பெற்றவர் காயசித்தி பெறுவதற்கு அருகராவர். உடல் பலஹீனப்படாவிடில் மனதை ஒருவழிப்படுத்துவதுமன்றித் தேக அப்பியாசமான மூச்சைக் கணக்குப்படி இழுத்தல், உள்ளே அழுத்தல், கிரமப்படி வெளியிடல் இவை பழகலாகும். இக்காலத்தில் ஆங்கில முறையிலும் சாண்டோ (Sandow) நியமித்த அப்பியாசங்களிலும் இவற்றைக் காண்கின்றோ மன்றோ?

தேகமானது ஒரு மனிதனுக்கு இலேசான பந்து போல் இங்குமங்கும் இயக்கத்திற்குப் பயன்படுமெனின், அக்காலத்திலேயே திருத்தொண்டிலாழ்ந்து ஞானமார்க்கமடைய முயலவேண்டும். ஆயினும் தேக வலிவு வந்தவுடன் பொய்திகழும் உலகநடையிற் போக்கு நேருவது சாதாரணம்.

ஓம்பினேன் கூட்டை வாளா
துள்ளத்தோர் சொடுமை வைத்துக்
காம்பிலா மூழை போலக்
கருத்திற்றே முகக்க மாட்டேன்
பாம்பின்வாய்த் தேரை போலப்
பலபல நினைக்கின் றேனை
யோம்பிநீ யுய்யக் கொள்ளா
யொற்றியூ ருடைய கோவே.

திருவொற்றியூர் - திருநேரிசை 1.

வீணாகக் காயசித்தி செய்வதில் பயனில்லை; ஜீவன் முக்தி அடையும்நிமித்தமே அதைச் செய்யவேண்டும். இதையே அப்பர்,

நில்லா வாழ்வு நிலைபெறுமென் றெண்ணிப்
பொல்லா வாறு செயப்புரி யாதுநீர்
கல்லா ரும்மதில் சூழ்தண் கருவிலிக்
கொல்லை ஏர்பவன் கொட்டிட்டை சேர்மினே

என்றார்.

திருக்கருவில் - திருக்குறுந்தொகை 7.

இவ்வாறு காயசித்தி செய்வதற்குப் பலகலைகள் ஏற்பட்டன. அக்கலைகள்யாவும் வைத்தியம் யோகம் என்னும்இருவகுப்பிலடங்கும்.தேகத்திற்குஅன்னியமான பொருள்களைக்கொண்டு தேகத்தைச் சீர்திருத்தித்திடமாக்கல் வைத்தியத்தின் தொழிலாம். தேகத்திலுள்ள தத்துவங்களாலேயே தேகத்தைச் சீர்திருத்தி திடமாக்கல் யோகத்தின் தொழிலாம்.

மணிசெய் கண்டத்து மான்மறிக் கையினன்
கணிசெய் வேடத்த ராயவர் காப்பினாற்
பணிகள் தாஞ்செய வல்லவர் யாவர்தம்
பிணிசெ யாக்கையை நீக்குவர் பேயரே.

சித்தத்தொகை - திருக்குறுந்தொகை 24

யாவருக்கும் யோகக்கலையை அமைப்பது கடினமாதலால் நமது சித்தர்கள் வைத்தியத்தை அபிவிருத்தி செய்து காயகல்பம் முதலிய மருந்துகளைச் செய்து தக்கவர்களுக்கு அவற்றைக் கொடுத்துத் தேகத்திற்கு மூப்பு வாராது தடுத்துப் பலகாலம் யௌவன பருவத்தை நிலைநிறுத்தினர். ஆயினும் இவ்வாறு வளரச் செய்த இளமை, இல்வாழ்க்கைச் சுகமும் அல்வழிச் சுகமும் அனுபவிப்பதற்கன்று

வாடி வாழ்வதென் னாவது மாதர்பால்
ஓடி வாழ்வினை யுள்கிநீர் நாடொறும்
கோடி காவனைக் கூறிரேற் கூறினேன்
பாடி காவலிற் பட்டுக் கழிதிரே.

திருக்கோடிகா - திருக்குறுந்தொகை 2.

என்பர் அப்பர். ஆகையால் உடலுக்குச் சித்தியெனின் உயிருக்கு முக்திதேடும் மார்க்கமாக*விருத்தல்வேண்டும். இன்றேல்காயசித்தி முடிவில் யாதொரு பயனும் தாராது. சித்திபெற்றவர்கள் சிவபெருமானைத் தியானிப்பின் உடனே முக்திபெறுவர். அவர் முக்திபெறுவதில் ஆலசியமேயிராது:—

சித்தாய் வந்து தன்னைத் திருவடி வணங்கு வார்கண்
முத்தனை மூர்த்தி யாய முதல்வனை முழுது மாய
பித்தனைப் பிறரு மேத்தப் பெருவேளூர் பேணினானை
மெத்தனே யவனை நாளும் விரும்புமா றறிகி லேனே.

திருப்பெருவேளூர் - திருநேரிசை 7.

---

* பிறப்பு மூப்புப் பெரும்பசி வான்பிணி
யிறப்பு நீங்கி யின்பம்வந் தெய்திடுஞ்
சிறப்பர் சேறையுட் செந்நெறி யான்கழல்
மறப்ப தின்றி மனத்தினுள் வைக்கவே.

திருச்சேறை - திருக்குறுந்தொகை 3.

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

காப்பு.

வென்றான் வினையின் றொகையா கிவிரிந்து தன்க
ணொன்றாய்ப் பரந்த வுணர்வின் னொழியாது முற்றுஞ்
சென்றான் றிகழுஞ் சுடர்சூ ழொளிமூர்த்தி யாகி
நின்றா னடிக்கீழ்ப் பணிந்தார் வினைநீங்கி நின்றார்.

வினையின் தொகை-இருவினைகளின் தொகுதியை, வென்றான் ஆகி - வென்று கடந்தவன் ஆகி; தன் கண் - தன்னிடத்தில், விரிந்து - விரிந்து, ஒன்றாய்ப் பரந்த — ஒன்றாய்ச் சேர்ந்து தங்கிய, உணர்வின் - உணர்விலிருந்து, ஒழியாது - நீங்காது, முற்றும் - முழுவதும், சென்றான் - சென்று சேர்ந்திருப்பவனும், திகழும் - பிரகாசிக்கின்ற, சுடர் - சோதி, சூழ் - சூழ்ந்த, ஒளி மூர்த்தி ஆகி - ஒளியையுடைய மூர்த்தியாகி, நின்றான் - நின்றவனுமாகிய அக் கடவுளினது, அடிக்கீழ் - பாதங்களின் கீழ், பணிந்து நின்றார் - வணங்கி நிற்பவர்கள், வினை நீங்கி நின்றார்-இருவினைத் தொடர்பிலிருந்து விடுபட்டவராவார்.

பாயிரம்.

1. அங்கண் ணுலகிற் கணிவான் சுடராகி நின்றான்
வெங்கண்வினை போழ்ந்திருவைச்சரண்சென்றமே
பைங்கண்மதர்வைப் பகுவாயரியேறு போழ்ந்த[ணெட்
செங்கண் ணெடியான் சரிதம் மிதுசெப்ப லுற்றேன்

குறிப்பு:—இச்செய்யுளின் பொருள் ஐயமறப் புலப்படவில்லை. ஆதலின் இங்கு உரை வரையாது விட்டிருக்கின்றோம்.

2. கொற்றங்கொ ணேமி நெடுமால் குணங்கூற விப்பா
லுற்றிங்கோர் காதல் கிளரத் தமிழ்நூற்க லுற்றேன்
மற்றிங்கொரு குற்றம் வருமா யினுநங்கள் போல்வா
ரற்றங்கள் காப்பா ரறிவிற் பெரியார்க ளன்றே.

கொற்றம் கொள் - வெற்றியைக்கொண்ட, நேமி - சக்கராயுதத்தையுடைய, நெடுமால் குணம் - நெடுமாலின் குணங்களை, கூற - சொல்ல, இங்கு - இப்பிறப்பில், இப் பால் உற்று - இந்த நல்வினையின் பகுதியை எய்தி, காதல் கிளர - அன்பு எழுந்து என்னைத் தூண்ட, தமிழ் - தமிழ் மொழியால், நூற்கல் உற்றேன் - இந்நூலை இயற்றப் புகுந்தேன்; இங்கு - இதன்கண், ஓர் குற்றம் - இடையிடையே ஒவ்வோர் குற்றம், வரும் - வந்து புகுதல் கூடும். ஆயினும் - அவ்வாறு வரினும், அறிவிற்பெரியார் - கல்வியறிவுகளாற் சிறந்த பெரியோர், நங்கள் போல்வார் - எம்மைப்போன்ற சிற்றறிவினரது, அற்றங்கள் - சொற்சோர்வு பொருட்சோர்வுகளை, காப்பார் அன்றே - பலரறியத்தூற்றாது மறைத்துக் காப்பார்கள் அன்றோ?

3. நாமாண் புரைச்குங் குறையென் னினுநாம வென்வேற்
றேமா ணலங்கற் றிருமா னெடுஞ்சேந்த னென்னுந்
தூமாண் டமிழின் கிழவன் சுடரார மார்பிற்
கோமா னவையுட் டெருண்டார் கொளப்பட்ட தன்றே.

நாமாண்பு - நாவின் மாட்சியையுடையார், குறை உரைக்கும் என்னினும் - இந்நூலினிடத்துள்ள குற்றங்களை எடுத்து உரைப்பார்களாயினும், நாம வென்வேல் - அச்சத்தைத்தரும் வெற்றிபொருந்திய வேலையும், தேம் மாண் அலங்கல் - தேன்பெருக்கினால் பொலிவுற்ற பூமாலையையும் உடைய, திருமால் நெடுஞ்சேந்தன் என்னும் - திருமாலின் அம்சமாகிய நீடிய புகழ்வாய்ந்த சேந்தன் என்று சிறப்பித்துச் சொல்லப்படும், தூமாண் தமிழின் கிழவன் - தூய்தான சிறப்புமிக்க தமிழுக்கு உரியநாயகனை, சுடர் ஆர மார்பின்-ஒளிவீசும் மணியாரம்துயல்வரும் மார்பினையுடைய, கோமான் - அரசனது, அவையுள் - அவையகத்தே, தெருண்டார் - தெளிந்த இலக்கண இலக்கிய அறிவுடையோரால், கொளப்பட்டது-இது ஆராய்ந்து அங்கீகரிக்கப்பெற்றது, அன்றே - அன்றோ?

நா மாண்பு - மாண்புநா, மாண்பினையுடைய நாக்கு என்றுமாம். நாம்-அச்சம் (உரிச்சொல்).தேம் - தேன்; வண்டு, மதுவுமாம்; தமிழின்கிழவன் சேந்தனென்னுங் கோமான் என்க. கொளப்பட்டது. 'இது' என்று எழுவாய் வருவிக்க. (3)

4. செங்கண் ணெடியான் றிறம்பே சியசிந்தை செய்த
நங்கண் மறுவு மறுவன்று நல்லார்கண் முன்ன
ரங்கண் விசும்பி னிருள்போழ்ந் தகல்வா னெழுந்த
திங்கண் மறுவுஞ் சிலர்கை தொழச்செல்லு மன்றே

செங்கண் நெடியான் - செந்தாமரையை யொத்த கண்களையுடைய நெடுமாலின், திறம் - சாமர்த்தியத்தை, பேசிய - சொல்ல, சிந்தை செய்த - கருதிய, நங்கண் மறுவும் - என்னிடத்துக் காணப்படும் களங்கமும், மறு அன்று - ஒரு குற்றம் ஆகாது. (எது போல் எனின்), நல்லார் கண்முன்னர் - நல்லோருடைய கண்ணுக்கெதிரில், அங்கண் விசும்பின் - இடமகன்ற வானத்தில், இருள் போழ்ந்து - இருளைப் பிளந்துகொண்டு, அகல்வான் எழுந்த-அகன்ற ஆகாயத்தில் உதித்த, திங்கள் - சந்திரனுடைய, மறுவும் - களங்கமும், சிலர் கைதொழ - சிலர் கையால் தொழுமாறு, செல்லும் - செல்லாநிற்கும். (4)

5. விஞ்சைக்கிறைவன் விரைசூழ் முடிவேந்தன் மங்கை
பஞ்சிக் கனுங்குஞ் சிலம்பா ரடிப்பாவை பூவார்
வஞ்சிக் கொடிபோல் பவள்கா ரணமாக வந்த
செஞ்சொற் புராணத் துரையின்வழிச்சேறு மன்றே.

பஞ்சிக்கு அனுங்கும் - செம்பஞ்சக்குழம்பு பூசுவதற்கும் வருந்தும், சிலம்பு ஆர் அடிப் பாவை - சிலம்புபொருந்திய பாதங்களையுடைய பாவையனும், பூஆர் வஞ்சிக்கொடி போல்பவள்-பூநிறைந்த வஞ்சிக்கொடியைப் போல்பவளும் ஆகிய, விஞ்சைக்கு இறைவன் - வித்தைகளுக்கெல்லாந் தலைவனாகிய, விரைசூழ் முடி வேந்தன் மங்கை காரணமாக-வாசனை பொருந்திய மாலையை அணிந்த கிரீடத்தை யுடைய அரசனது மகளின் நிமித்தமாக, வந்த - தோன்றிய, செஞ்சொற் புராணத்து - செவ்விய சொல்லாலமைந்த புராணத்தின், உரையின் வழி - கதைப்போக்கின் வழியிலே, சேறும் - செல்லுதும்.

1. நாட்டுச் சருக்கம்.

6. மஞ்சுசூழ் மணிவரை யெடுத்த மாலமர்
இஞ்சிசூ ழணிநக ரிருக்கை நாடது
விஞ்சைநீ ளுலகுடன் விழாக்கொண் டன்னது
துஞ்சுநீ ணிதியது சுரமை யென்பவே. 1

மஞ்சு - மேகம், சூழ் - சூழ்ந்த, மணி - இரத்தினங்களையுடைய, மலை - மலைபோல், எடுத்த - நிமிர்ந்த, மால் - பெருமை, அமர் - தங்கிய, இஞ்சி - மதில்கள், சூழ் - சூழ்ந்த, அணி - அழகிய, நகர் - (போதனம் என்னும்) நகரை, இருக்கை - (தன்னிடத்தில்) இருக்கப்பெற்ற, நாடுஅது - நாடாகிய அது; நீள் - ஒளி பொருந்திய, விஞ்சை உலகுடன் - வித்தியாதர உலகத்திற்குச் சமமாக, விழாக்கொண்ட அன்னது-(ஒரு போதும் அகலாத) விழாக்களைக் கொண்டதை ஒத்ததாகி, துஞ்சும் - தங்கிய, நீள் - மிகுந்த, நிதியது - செல்வங்களை உடையது. (அந் நாட்டை) சுரமை என்ப - சுரமை என்று சொல்வர்.

---

7. பங்கயங் காடுகொண் டலர்ந்த பாங்கெலாம்
செங்கய லினநிரை திளைக்குஞ் செல்வமும்
மங்கையர் முகத்தன மதர்த்த வாளரி
அங்கயற் பிறழ்ச்சியு மறுத நீரவே. 2.

(அந்த நாட்டில்), பங்கயம் - தாமரை மலர்கள், காடு கொண்டு - காடாக, அலர்ந்த - மலர்ந்த, பாங்கு எலாம் - இடங்களில் எல்லாம், செம் - செவந்த, கயல் - கயல்மீன்களின், இனம் - கூட்டம், நிரை - வரிசையாக, திளைக்கும் - நிறைந்திருக்கும், செல்வமும் - நீர்வளமும்; மங்கையர் - மாதர்களது, முகத்தன - முகங்களிலிருப்பனவாகிய, மதர்த்த - களிப்பு மிகுந்த, வாள் - ஒளி பொருந்திய, அரி - வரிபடர்ந்த, அம் - அழகிய, கயல் - கயல்மீன் போன்ற கண்களின், பிறழ்ச்சியும் - புரள்தலும், அறுத - நீங்காத, நீர - தன்மை வாய்ந்தன. (ஏ - அசை)

நீரின் வளப்பமும் மாதரழகும் குறையாத நாடு, என்பது இச்செய்யுளின் கருத்து. செல்வமும் பிறழ்ச்சியும் அறுத நீரஎனமுடியும். இப்பொருளில் 'பாங்கு' என்பதைப் 'பக்கங்களில்' என்று ஏழாம்வேற்றுமைத் தொகையாகக் கொள்ளல்வேண்டும். மற்றப் 'பாங்கு' என்பதை எழுவாயாக வைத்து 'நீர' என்பதைப் பயனிலையாக்கி வேறொரு பொருள் கூறினு மமையும். அது வருமாறு:—

மங்கையர் - மாதர்களது, முகத்து அன - முகங்களைப்போன்ற, பங்கயம் - தாமரை மலர்கள், காடு கொண்டு - மிகுதியாக, அலர்ந்த - மலர்ந்த, பாங்கு எலாம் - இடங்கள் எல்லாம், செம் - சிவந்த, கயல் - கயல்மீன்களது, இனம்-கூட்டங்களின், நிரை-விரிசை, திளைக்கும் - நிறையும், செல்வமும் - செல்வமும், மதர்த்த-களித்த, வாள் - ஒள்ளிய, அரி - வண்டுகள், அங்கு - அங்கு, அயல் - பக்கத்தில், பிறழ்ச்சியும் - விளங்குவதும், அறுத - நீங்காத, நீர - தன்மையை உடையன.

மாதர்முகத்தில் கண் பிறழ்வதுபோல் முன்னதற் குவமையான தாமரைமலர்களில் பின்னதற் குவமையான கயலும் வண்டும் பிறழ்ந்தன.

---

8. ஆங்கவ ரணிநடை யன்னத் தோட்டன
தீங்குரன் மழலையாற் சிலம்புந் தண்பணை
வீங்கிள முலையவர் மெல்லென் சீறடி
யோங்கிருஞ் சிலம்பினற் சிலம்பு மூர்களே. 3.

ஆங்கு - அந்தச் சுரமைநாட்டின்கண், அவர் - அம் மாதர்களது, அணிநடை-அழகிய நடையைப்போன்ற நடையையுடைய, அன்னம் - அன்னப்பறவைகளின், தோட்டன - கூட்டங்களினுடைய, தீம் - இனிமையான, குரல் - குரலோடுகூடிய, மழலையால் - மழலைகளால், தண்பணை - குளிர்ச்சிபொருந்திய வயல்கள், சிலம்பும் - ஒலிக்கும். ஊர்கள் - ஊர்கள், வீங்கு - பருத்த, இள - இளமைபொருந்திய, முலையவர் - முலைகளையுடைய மாதர்களது, மெல் என் - மென்மை பொருந்திய, சிறு அடி - சிறியபாதங்களில், ஓங்கு - விளங்குகின்ற, இரும் - பெருமைபொருந்திய, சிலம்பினல் - சிலம்பென்னு மாபரணங்களால், சிலம்பும் - ஒலிக்கும்.

அன்னங்களின் குரல்கள் வயல்களிலும், மாதர்களின் சிலம்பு ஊர்களிலும் ஒலிக்கும் என்பது இச் செய்யுளின் கருத்து.

---

9. நிழலகந் தவழ்ந்துதே னிரந்து தாதுசேர்
பொழிலகம் பூவையுங் கிளியும் பாடுமே
குழலகங் குடைந்துவண் டுறங்குங் கோதையர்
மழலையும் யாழுமே மலிந்த மாடமே. 4.

தேன் நிரந்து-தேன் நிரம்பி, தாதுசேர் - மகரந்தம் சேர்ந்த, பொழில் அகம் - சோலைகளில், பூவையும் - நாகணவாய்ப்புட்களும், கிளியும் - கிளிகளும், நிழல் அகம் தவழ்ந்து - நிழலுடைய இடங்களையடைந்து, பாடும் - பாடும். மாடம் - வீடுகளில், குழல் அகம் - கூந்தலிற்குள், குடைந்து - புகுந்து, வண்டு - வண்டுகள், உறங்கும் - தங்கப்பெற்ற, கோதையர் - மாலையணிந்த மகளிரது, மழலையும் - மழலைச் சொற்களும், யாழும் - (அவர்கள் வாசிக்கும்) வீணையும், மலிந்த - நிறைந்திருந்தன.

---

10. காவியுங் குவளையு நெகிழ்ந்து கள்ளுமிழ்
ஆவியுண் டடர்த்ததே னகத்து மங்கையர்
நாவியுங் குழம்புமுண் ணகில நற்றவ
மேவினின் றவரையு மெலிய விம்முமே. 5.

(மாலையாகக் கொண்ட) காவியும் - காவி மலரும், குவளையும் - குவளை மலரும், நெகிழ்ந்து - இதழ் அவிழ்ந்து, (அதனால்), கள் - மது, உமிழ்-வீசுகின்ற, ஆவி - வாசனையை, உண்டு - உட்கொண்டு (வந்து), அடர்ந்த - நெருங்கிய, தேன் - வண்டுக்கூட்டம் (மொய்க்கின்ற), அகத்து - மார்பினையுடைய, மங்கையர் - (அந்நாட்டு) மாதர்களது, நாவியும் - கஸ்தூரியும், குழம்பும் - சந்தனக் குழம்பும், உண் - பூசிய, நகிலம் - முலைகள், நல்தவம் - நல்ல தவநிலையில், மேவி - பொருந்தி, நின்றவரையும் - இருப்பவராகிய முனிவர்களையும், மெலிய - விருப்பத்தால் இளைக்கும்படி, விம்மும் - பூரிக்கும்.

சீவகசிந்தாமணியின்கண் "கள்ளாவி நாறுங் கமழ் கோதை" என்னும் தொடரில் 'ஆவி' என்பது 'மணம்' என்னும் பொருளில் வந்திருக்கின்றது. "தேன் அகத்து மங்கையர்" என்னுந் தொடர்க்கு, தேன் போன்று திளைத்தோர்க்கு இனிமையைத் தருகின்ற மார்பினையுடைய மாதர், எனப் பொருள்கொள்ளினு மமையும்.

---

11. வானிலங் கருவிய வரையு முல்லைவாய்த்
தேனிலங் கருவிய திணையுந் தேறல்சேர்
பானலங் கழனியுங் கடலும் பாங்கணி
நானிலங் கலந்துபொன் னரலு நாடதே. 6.

வான்நிலம் - ஆகாயத்தினிடத்தே, கருவிய - நட்பினை உடைய, வரையும் - மலைகளும்; முல்லைவாய் - முல்லை மலர்களினிடத்தில், தேன்-தேனை, இலங்கு - விளங்குகின்ற, அருவிய - அருவியாகவுடைய, திணையும்-இடங்களும், தேறல் சேர்-தேன் சேர்ந்த, பானல்-கருங்குவளை மலர்களையுடைய, அம் கழனியும் - அழகிய கழனிகளும், பாங்கு - அழகிய, அணி - ஒழுங்கான, நால்நிலம் - (குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்னும்) நான்கு நிலங்களும், கலந்து - சேர்ந்து, பொன் - பொலிவுடன், நரலும்-ஒலிக்கும், நாடு அது நாடு ஆகும் அந்தச் சுரமை என்பது.

யாப்பிலக்கணம்

முன்னுரை

தமிழ்ப்பயிற்சி ஓரளவு கைவந்தவர் தாம் பாசுரங்கள் சில பாடவேண்டுமென்னும் ஆசையடைதல் இயற்கையே. அடுக்காது இவ்வாசையென்று அதனைக் கடியவும் வேண்டா. செவ்விய ஓசைசேர்ந்த செய்யுள்களில் அமைவதால் உயரிய கருத்துக்களின் நயமும் பயனும் அதிகமும் மிகுவதாகும். உயிரிற்கு உடல்போல் கருத்திற்குச்செய்யுள் நிற்கின்றது. உயர்ந்தது உயிரேயானாலும் அதனைத் தாங்கிய உடலின் வனப்பினால் உயிர்ப்பொலிவு சிறப்புடன் விளங்கலாவதுபோன்று மாண்புடைய கருத்துக்கள் சீரிய செய்யுளுருவத்திற் சேர்ந்தக்கால் சிறப்பெய்துகின்றன. "தன்னுடைய தந்தை கைப்பொருளெல்லாம் இரப்பவர்க்குக் கொடுத்துக்கொடுத்துக் கெட்டான் என்று மைந்தர் யாதுங் கொடாமல் கரக்கலாகாது. தாய்வாழை குலையீன்றதால் தான் குறைக்கப்பெற்றது என்பதையுணர்ந்தும் அதன்கீழ் இருக்கின்ற கன்று கனியொன்றுங் கொடாமல் தன்னுயிரைக் காத்துவைத்துக்கொள்ள முயல்கின்றதோ-இல்லையே. கொடுத்துக்கொடுத்துத் தரித்திர மடைந்துநலிந்தவன் புதல்வனும் தன்னாலானதைக் கொடுக்கவே கடவன்" என்னு மிக்கருத்துப் பெருமை மிக வாய்ந்தது. ஆனாலிதனையே சிவப்பிரகாச சுவாமிகள்,

எந்தைநல் கூர்ந்தா னிரப்போர்க் கீந்தென்றவன்
மைந்தருந்தம் மீகை மறுப்பரோ—பைந்தொடீ
நின்று பயனுதவி நில்லா வரம்பையின்கீழ்க்
கன்று முதவுங் கனி

என்று ஓர் வெண்பாவிற் பாடுங்கால் பெருமைவாய்ந்த அக்கருத்தின் அருமை பின்னும் அதிகமாகின்றது. இத்தகைய உயரிய கருத்துக்கள் உதிக்கின்ற உள்ளமுடையவர் யாப்பிலக்கணந்தெரியாமையால் அதனைச் செய்யுளி லமைத்துப்பாட இயலாமல் மயங்காவண்ணம் அவ்விலக்கணத்தைக் கற்றுக்கொள்ளல் நேரிதே. இலக்கியச்சுவையின் முதிர்ச்சியாலும் அதனால் விளைகின்ற ஆன்மானுபவத்தினாலும் மேன்மைவாய்ந்த எண்ணங்கள் பிறப்பதற்கியன்ற மனநிலை எய்தினோர்களே யாப்பிலக்கணம் கற்பதற்கும் கவிபாட முயல்வதற்கும் உரியவர்களாவார். இந்த இலக்கணத்தைக் கற்பதற்குமுன்னரே அரும்பெருங் கவிகளின் செய்யுள்கள் மனத்தில் ஊறிஊறி அவைகளிலமைந்த பொருள்களின் பெருமையும் தொடர்களின்நயமும் ஓசையின் இன்பமும் நீங்காத உருக்கொண்டு நிலைத்தவர்களா யிருந்தாலன்றிப் புன்கவிகளாய்முடிந்துவிட நேரிடும்.

யாப்பிலக்கணங் கற்காமல் கவிபாட இயலாது என்னலாமே யன்றி அவ்விலக்கணங் கற்றமாத்திரையில் யாவரும் கவிகளாய்விடலாமென்பது எம்கருத்தன்று. யாப்பிலக்கணம் ஒரு கருவியே. உளியின்றித் தச்சன் சித்திரப்பதுமை சமைக்க இயலாதென்பதால் உளியைக் கைக்கொள்வோரெல்லாம் சிறப்புமிக்க பதுமைகளைச் சமைத்துவிடுவார்களென்று எண்ணலாமோ. பிறப்பினால் கவிகளாகலாமே யன்றிச் செய்கையால் கவிகளாதல் இயலாது என்னும் ஓர் ஆங்கிலப் பழமொழி. எனினும், பயிற்சியும் முயர்ச்சியும் ஓரளவு கைதந்துதவும். அதன்மேல் உத்தமக் கவிகளாதற்குக் கலைமகளருளாற் பெற்ற உள்ளத்தியற்கையே வேண்டும். இது சங்கீதம் அனைய மற்றக் கலைகளுக்கும் பொருந்தக்கூடியதொன்று.

கவிபாட வேண்டுமெனுங் கருத்து ஒருபுறமிருக்க, யாப்பிலக்கணங் கற்பதால் வேறோர் நற்பயனுளது. இசையிலக்கணத்தினை அறியாதவர்களும் பண்ணமைந்தபாடல்களைக்கேட்குங்கால் இன்புறலாமாயினும் அவ்விசையிலக்கணத்தின் நுணுக்கங்களை நன்குதேர்ந்திருப்பவர்களே பாட்டின் அருமையை முற்றினுமறிந்து அநுபவிக்கும் பெற்றியவராவார். சித்திரம் சிற்பம் முதலிய கலைகளின் இலக்கணஅறிவு இல்லாதவர்களால் அவ்வக் கலைப்பொருள்களின் உண்மையாய பெருமையை உணர்தல் அருமையாகும். செய்யுட்கலையும் அவ்வாறே. பொருளிற்கேற்ற ஓசையும் அவ்வோசைக்கேற்ற சீர் தளை தொடை முதலியவைகளின் அமைப்பும் தோன்றுகின்ற தொழிற்றிறம் தெரிந்தக்கால் அச்செய்யுளின் சுவை நன்கு புலப்படும் என்பதில் ஐயமில்லை.

இன்னும் சில உதவிகளைப் புரியவல்லது யாப்பிலக்கணப் பயிற்சி. அச்சிட்டுப் பதிப்பிக்கப்படும் நூல்களில்வெண்பா ஆசிரியப்பா கலிப்பாக்களே சீர்பிரித்து அலகிட்டுக் காட்டப்பெற்றிருக்கின்றன. விருத்தங்களும் கலிநிலைத்துறைகளும் கட்டளைக்கலித்துறைகளும் பெரும்பாலும் அலகிடப்பெற்றுப் பதிப்பிக்கப்படுவதில்லை. யாப்பிலக்கணம் தெரிந்திருப்பவர்க்கன்றி அவைகளைச் சீர்பிரித்து ஓதுவது இயலாது. ஆனால், சீர்பிரித்து ஓதப்பயில்வதால் பயன் பெரிதுளது. சீர்பிரித்துச் சந்தத்தோடு படிக்கப் பயில்வதால் செய்யுள்களை நெட்டுருச்செய்வது எளியதாகும். முதலிற் பொருள் விளங்காது இருந்த செய்யுளும் சீர்பிரித்துப் பார்த்தபின் பொருள்விளங்கத் தலைப்படும். சிற்சில சமயங்களில், இரண்டுபொருள்களுக்கு இடந்தந்து நிற்கின்ற ஓரடிக்குக் கவியின்பொருள் இதுதான் என்று யாப்பிலக்கணம் காட்டக்கூடும். யாப்பிலக்கணத்தின் உதவியால் அச்சுப்பிழைகள் சிலவற்றைத் திருத்திக்கொள்ளவுங் கூடும். இவைகளுக்குத் தக்க உதாரணங்கள் ஆங்காங்கே செவ்விநேரும்போது காட்டிக்கொண்டு வருவோம்.

செய்யுளிலக்கணம் முழுவதையும் பண்டைமுறைப்படி இங்கு வரைகின்ற நினைவு எமக்கில்லை. முன்னுரைத்த நோக்கங்கள் நிறைவேறுவதற்கு எத்துணையளவு இவ்விலக்கணவறிவு வேண்டுமென்பதை மதித்து அவ்வளவினையே எளியவகையில் யாவரும் கற்றுக்கொள்ளும் முறையைக் கடைபிடித்து இங்கு விளக்கி வருவோம்:—

---

1. அசை

மிக்கோ னுலகளந்த மெய்யடியே சார்பாசப் (1)
புக்கோ ரருவினைபோற் போயிற்றே—அக்காலம் (2)
கானகத்தே கர்தலியை நீத்துக் கரந்துரையு (3)
மானகத்தேர்ப் பாகன் வடிவு. (4)

என்பது நளவெண்பாச் செய்யுள்களில் ஒன்று. இதனில் நான்கு அடிகள் இருக்கின்றன. பெரும்பாலும் நான்கடிச் செய்யுள்களாலே நூல்கள் பயின்று வருகின்றனவாயினும், நான்கடிகள்தான் இருக்கவேண்டுமென்ற நியதியில்லை.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு

என்பதுபோன்ற திருக்குறள் செய்யுள்கள் இரண்டு அடிகளால் ஆனவை. குறுந்தொகை, புறநானூறு முதலிய நூல்களில் 8, 10, 15, 20, 30 அடிகளுடைய செய்யுள்களைக் காணலாம். 'மணிமேகலை' என்னும் நூலின் செய்யுள்கள் நூற்றுக்கணக்கா லான அடிகளை உடையன.

இப்படிப் பல அடிகளால் நடப்பது செய்யுள். ஒவ்வோரடியிலும் பல சீர்கள் இருக்கும். இந்தப் பாட்டில் முதல் மூன்று அடிகளின் ஒவ்வொன்றிலும் நான்கு சீர்களும் ஈற்றடியில் மூன்று சீர்களும் இருக்கின்றன (1) மிக்கோ (2) னுலகளந்த (3) மெய்யடியே (4) சார்பாக, என்று சீருக்குச்சீர் இடம் விட்டு எழுதிக்காட்டுவது வழக்கம். அப்படியே இரண்டாவது அடியில், புக்கோ ரருவினைபோற் போயிற்றே அக்காலம், என நான்கு சீர்கள் இருக்கின்றன. (இரண்டாவது அடியில் மாத்திரம் மூன்றாம் சீரிற்கும் நான்காம் சீரிற்கும் இடையே ஒரு கோடிட்டிருப்பதன் காரணம் பிறகு தெரியவரும்.) அப்படியே மூன்றாவது அடியில் நான்கு சீர்கள் இருக்கக் காணலாம். நான்காவது அடியில் (1) மானகத்தேர் (2) பாகன் (3) வடிவு,—என மூன்று சீர்கள் இருக்கின்றன. இரண்டு சீர்களே உடைய செய்யுளடிகளும் உண்டு. மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, சீர்களும், அதற்கும் மேற்பட்ட சீர்களால் அமைந்த செய்யுளடிகளும் உண்டு.

இப்படிப் பல சீர்களால் ஆவது ஒரு அடி. இந்தச் சீர் ஒவ்வொன்றும் அசைகளால் ஆகும். இவ்வசைகள் ஆவது எழுத்துக்களால் என்பது சொல்லாமலே புலப்படும். ஆனால் ஒரு சீரில் எத்தனை எழுத்துக்கள் இருக்கின்றனவோ அத்தனை அசைகளால் அந்தச் சீர் ஆயிற்று என்று கொள்ளப்படாது. இந்தச் செய்யுளில், மிக்கோ என்ற சீரில் மூன்று எழுத்துக்களிருந்தாலும் அதனில் இரண்டு அசைகளே இருக்கின்றன. னுலகளந்த என்ற இரண்டாவது சீரில் ஆறு எழுத்துக்கள் இருந்தபோதிலும் அதனில் உள்ள அசைகள் மூன்றே. ஐந்து எழுத்துக்களால் ஆய மெய்யடியே என்னும் அடுத்த சீரில் இருப்பன மூன்று அசைகளே. எனின், எழுத்துக்கள் எப்படி நின்றால் அசைகளாகின்றன என்பதை இனிப் பார்ப்போம்.

மானதசாத்திரம்

[PSYCHOLOGY]

[3-வது வால்யூம், 650-வது பக்கத் தொடர்ச்சி]

(உணர்வு-Perception)

புலன் - (Sensation)

எண்ணுதல் நினைதல் கனவுதல் கருதுதல் என்பன மனதின் பலவகையான செயல்களைக் குறிக்கின்றன. இவையனைத்தையும் குறிப்பதற்குப் பொதுவாக உள்ளுதல் என்ற சொல்லை நாமிங்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். உள்ளுதலாவது உள்ளத்தின் செயலாம். அவ்வுள்ளுதலோ, உணர்தல் நினைத்தல் எண்ணுதல் கருதுதல் என்று பலவகைப்படும். "காண்பான்-காட்சி-காணப்படுபொருள்" என்று உண்மை நூலோர் செய்யும் ஆராய்ச்சியை நாம் அறிவோம். அதுபோல உள்ளுதல் என்ற வினைக்குச் செயப்படுபொருளாகக்கூடிய பொருள்களைக் குறிப்பதற்கு ஒரு பெயர் வேண்டுமன்றோ? செயப்படுபொருள் என்ற சொல்லமைப்பை ஒட்டி உளப்படுபொருள் (Object) என அதனை நாம் வழங்குதல் தகும். இவ்வுளப்படுபொருள் வடிவுடையதாகவோ பலனைக் கூடியதாகவோ இருக்கவேண்டுவதில்லை. செம்மையை உள்ளும்போது செம்மை என்பதும் உளப்படுபொருள் ஆகின்றதல்லவா? பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்பவையோ பொருள் பண்பு தொழில் பொதுமை சிறப்பு தொடர்பு. இன்மை என்பவையோ உளப்படுபொருள் ஆகலாம் அன்றோ! கண் முதலிய பொறிகளால் கண்டறியக்கூடிய பொருள்களைக் காட்சிப்பொருள் என்றும், அவ்வாறன்றி மனத்தால்மட்டும் அறியக்கூடிய அன்பு முதலியவற்றைக் கருத்துப்பொருள் என்றும் நச்சினார்க்கினியர் வகைசெய்கின்றார். ஆனால் நாம், இக்காட்சிப் பொருள்களை இருவேறு நிலையில் உள்ளுகிறோம். அவை நமது பொறிகளுக்கு எதிரே நின்று புலனாகும் போது உள்ளுவது ஒன்று; அவை அவ்வாறு புலனாகாதபோதும் உள்ளுவது மற்றொன்று. முன்னைய உளப்படுபொருளைப் புலப்பொருள் என்றும், பின்னையதைப் புலனல்பொருள் என்றும் வழங்குவோம். புலனல்பொருள் என்றால் எப்போதும் புலனாகக்கூடாத பொருள்கள் என்பதன்று; இப்போது புலனாகாத பொருள் என்பதையே குறிப்பதாகக் கொள்ளவேண்டும். பொருள் காட்சிப்பொருளாகவும் இருக்கலாம். என் எதிரே செம்பொன் னுருக்கெனத் திகழும் செவ்வானமும், கோயிலிலிருந்து என் செவியிற் புகும் இனிய இசைப்பாட்டும், தென்றல்வழியாக யான் முகரும் முல்லைமலரின் நறுநாற்றமும் மெல்லென உடல் குளிர ஊற்றின்பம் உதவும் இம்மாலைத் தென்றலும் இழுமெனும் ஓடையருகே நின்று நாவூற நான் அள்ளிக்குடிக்கும் இத்தூநீரும் புலப் பொருள்களேயாம். இப்போது மறைந்த கதிரவனை உள்ளுகின்றேன். யான் புறத்தே விட்டுவந்த வண்டியை உள்ளுகின்றேன். இவை எனக்கு இதுபோது புலனாகாமையால் இவை புலனல் பொருள்களேயாம். கண்ணெதி

ரே தோன்றும் செவ்வானம் கண்ணை நான் மூடியதும் புலனல்பொருளாகின்றது. எனவே புலனல்பொருள் என்றால் புலனாகக் கூடாத கருத்துப்பொருள் என்பதன்று. பொறிக் கெதிர் இதுபோது புலனாகாதது என்பதே பொருள், நிறைவெண்டிங்கள் கீழ்ப் புறத்தே பேரழகோடு இன்பவடிவாய் ஒளிவீசி எழுகின்றது; புலப்பொருளாய் ஒளிர்கின்றது. கருமுகில் ஒன்று அதனருகே வந்து அதனை மறைக்கின்றது. இதுபோது அத்திங்கள் புலனல் பொருளாக மாறிவிடுகின்றது. சிறிது தாழ்த்ததும் ஓடும் அம்முகில் அப்புறத்தே பறந்து செல்கிறது. முகிலிடைப் புகுந்த முழுத்திங்கள் மறுபடியும் புலப்பொருளாகின்றது. இனி உணர்வென்பது புலப்பொருளை உள்ளுவதேயாம்.

ஒரேபொழுதில் இரண்டு பொருள்களைப்பற்றி ஒருங் குடன்எண்ணுவது இயலாதாம். நம்மைச்சுற்றியும் பல புலப்பொருள்கள் நம்மைத் தாக்குகின்றன. அவற்றில் ஏதேனும் ஒன்றையே நாம் உணர்கின்றோம். அவ்வொரு பொருள், தனிப்பொருளாக இருக்கலாம்; கலவைப்பொருளாக இருக்கலாம். மலைமீதிருந்து கீழே அடர்ந்திருண்ட காட்டினிடையே பரந்து கிடக்கும் சிற்றூரினைப் பார்க்கிறேன். ஊரினுள்ளோ, தோப்புகளும் துறவுகளும் மனைகளும் வயல்களும் தோன்றுகின்றன. இவற்றில் எத்துணைப் பொருள்களை யான் காண்கின்றேன்? அஃது என்னுடைய நோக்கத்தைப் பொறுத்ததன்றோ? மேற் பறக்கும் பறவைபோல ஊரின் வடிவைக் காணவேண்டினால், மனையும் வயலும் தோப்புந் துறவுமாகிய பல உறுப்புகள் பெற்றவோர் உறுப்பாக அக்காட்சியை இயைபுபடுத்திக் காட்டிடைக் கண்ட சிற்றூரெனப் பார்த் தகமகிழ்கின்றேன். அதில் எனது நண்பனது வீட்டைக் காணவேண்டுமானால் ஒருபோது ஒரு வீடாக ஒவ்வொரு வீட்டையும் மாற்றி மாற்றிப் பார்த்துக் கண்டறிகின்றேன். அவ்வீட்டின் கூரை, இறை, திண்ணை, வாயில் முதலிய உறுப்புக்களை வீடெனும் ஓர் உறுப்பாக இயைபுபெற அமைத்துக் காண்கிறேன்.

புலப்பொருளை உள்ளுவதே உணர்வாகும் எனக் கண்டோம். வெளிப்பொருள்கள் நம் பொறிகளைத் தாக்குதல் வேண்டும்; அங்கு நரம்புக்கிளர்ச்சிகள் எழுதல் வேண்டும்; இக்கிளர்ச்சி மூளையிற் சென்று பாய்தல் வேண்டும். இத்துணையும் வேண்டுமன்றோ இவ்வுணர்வு எழுவதற்கு? அழகைக்கண்டு களிப்பது, இப் புறப்பொருள் தாக்கலாலன்றிக் கைகூடுவதோ? நம்முடைய நல்லொழுக்கத்தின் மாண்பும் இப்புறத் தாக்க லில்லையாயின் இல்லையாம்.

ஒருவரை ஒருவர் கண்டு அளவளாவி இன்சொற் பேசி இனிது நடப்பதன்றோ ஒழுக்கமாவது. மற்றையோரது வடிவும் செயலும் மொழியும் புலனாகாது போமானால் இவ்வொழுக்கமேது; புறப்பொருளாய் நின்று பொறிவழியாக நம்மைத் தாக்கியன்றோ இவை புலனாகின்றன. புறத்தாக்க லில்லையாயின் பொய்யொழுக்கமும் இல்லை; மெய்யொழுக்கமும் இல்லை. எனவே புலனே (sensation) எவ்வெவற்றிற்கும் அடிப்படையாகும்.

புத்தாக்கல் வடிவமாக, இவ்வுலகமானது, நம்முள் புகுவதற்கென அமைந்து கிடக்கும் வாயிற்படிகளே நமது பொறிகளாகும். உலகத்திலே ஒளியென்றும் ஒலியென்றும் பலவகையான ஆற்றல்கள் பொங்கி வழிகின்றன. இவற்றில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து நமது பொறிகள் உள்ளே புகவிடுகின்றன. இப்பொறித் தேர்தல் அப்பொறிகளி னியல்பினாலாயதொன்றேயன்றி அவை வேண்டுமென்றே தம்முயற்சியால் செய்வனவல்ல.

சல்லடைக்கண்கள் தம் கண்ணளவு சிறிய பொருள்களைமட்டும் கீழ்வீழத்தள்ளி மற்றையவற்றை மேலேயே நிற்குமாறு தடுப்பதுபோல நமது பொறிகளும் தத்தமது இயல்புக்கேற்ற ஆற்றல்களைமட்டும் உள்ளே புகவிடுகின்றன. நமது கண் ஒளியைமட்டும் உள்ளே விடும்; நமது காது, ஒலியைமட்டும் உள்ளே விடும். ஆனால் இவ்வாறு பொறிகள் சிறப்புநிலை பெற்று விளங்குவது உயர்நிலையடைந்த உயிர்களிடையே தான். முன்னான் (Protozoa) முதலிய கீழ்நிலை உயிர்களிடையே புலன் என்பது பொதுவாகவே காணக்கிடக்கின்றது. ஒளி எங்கேனும் அதனுடலில் தாக்கலாம்; அவ்வுயிருளி எதிருன்றி நிற்கும்; அது உடலெல்லாம் கண்ணாக உடலெல்லாம் மூக்காக விளங்குகின்றது. உயிர்கள் உயர்நிலை பெற்று வருகையில் சிற்சில உறுப்புக்கள் சிற்சில ஆற்றல்களால் இயக்கமுறுகின்றன. காதில் ஒளி புகுந்தால் நாம் அறிவதில்லையன்றோ? ஒளியால் மட்டும் தாக்குண்ணும் கண்ணும், ஒலியால் மட்டும் தாக்குண்ணும் காதும், நாற்றத்தால்மட்டும் தாக்குண்ணும் மூக்கும் சுவையால்மட்டும் தாக்குண்ணும் நாக்கும் என வெவ்வேறு பொறிகள் சிறப்புநிலைபெற்று உயர்நிலை யுயிர்களிடையே காணப்படுகின்றன.

இப்பொறிகள் வாயிலாகத்தான் பொருள்கள் புலனாகின்றன. வெறும் புலனைக் காண்பது அருமையினும் அருமை. புலனுக்கும் உணர்வுக்கு முள்ளவேற்றுமையை முன்னரே காட்டினோம். புலன்ஒவ்வோருறுப்பின் எதிருன்றல் என்றும், உணர்வு உயிருளியின் எதிருன்றல் என்றும் கண்டோம். மிளகை இடித்துப் பொடி செய்கின்றனர். அப்பொடி காற்றின் வழியே வந்து என்மூக்கிற் புகுகின்றது. மூக்கிலிருந்து சிறிது நீர் வடிகின்றது. எழுதுவதிலேயே கருத்தாய் உள்ள நான் அதனைக் கருத்தாய்க் காணவில்லை. மேலும் மேலும் மிளகுப்பொடி பறந்து வருவதால் மூக்கெரிதல் கண்டு மூக்கைச் சிந்துகிறேன். இப்பின்னிலையில் மிளகை உணர்கின்றேன்; முன்னிலையில் உணரவில்லை; ஏன்? மிளகு புலனாய அவ்வளவில் நின்றுவிட்டதனாலன்றோ?

அன்றியும் ஒருபொருள் புலனானால் அஃதியாதென உடனேயே உணர்ந்துகொள்கிறோம். ஒரு மாம்பழம் மஞ்சள்நிற வட்டமாய்ப் புலனாய பொழுது அதனைப் பற்றி நான் முன் அறிந்தனவும் நினைவிற்கு வருகின்றன. மாம்பழமென்ற பொருளை உணர்கின்றேன். புலன்கள் இவ்வாறு முன்னினைப்போடு இயைந்து வருகின்றமையால் வெறும் புலனைமட்டும் தனித்துணர்வது அருமை. சிறு குழவியினிடத்தில்தான் முன்னினைப்போ டியையாத புலன் காணக்கிடக்கும். சிறு குழவியெதிரே மாம்பழத்தைக் காட்டினால், அதற்கு அஃது ஒரு மஞ்சள் நிறத்துண்டாகப் புலனாகும். அக்குழவி மாம்பழம் என்று அப்பொருளையுணர்வதில்லையன்றோ.

புகுவாய்நரம்பும் இயங்குவாய்நரம்பும் இணைத்திருப்பதே ஒரு நரம்புவட்டம் என்றும், அவ்வட்டம் முதுகுக் குழையோடு முடியுமானால் அதுவே அடிநிலைநரம்புவட்டமாம் என்றும், அவ்வட்டம் முன்மூளைவரையில் சென்றுவந்து முடியுமானால் அதுவே இடைநிலை நரம்புவட்டமாம் என்றும் முன்னரே கண்டோம். பொறிகளிலிருந்து செல்லும் நரம்புகளும் இவ்வாறு அடிநிலை நரம்புவட்டத்தோடும் இடைநிலை நரம்புவட்டத்தோடும் தொடர்புண்டு கிடக்கின்றன. புகுவாய் நரம்புகளும் இயக்கவாய் நரம்புகளும் இவ்வாறு இரண்டு வேறு நிலையில் தொடர்புண்டு கிடப்பானேன். ஒன்று குறுக்கு வழி, ஒன்று சுற்று வழிஎன்று சொல்வோமா? இவ்வாறு வேறொரு பயனுமின்றி, இரண்டு வேறுவழிகளை யமைக்க இயற்கை யன்னைக்கு வெறி யேறிவிட்டதோ? இல்லை இல்லை. அடிநிலை நரம்புவட்டத்திலோ, புலனரம்புகள் அவ்வவற்றிற்கேற்ற பொறியின் அருகில் உள்ள இயக்க நரம்புகளோடுமட்டும் இயைபுண்டு கிடக்கின்றன. ஆனால் இடைநிலை நரம்புவட்டத்திலோ, அருகில் இல்லாத வேறு பல இயக்க நரம்புகளோடும், ஒருவழியாக அன்றிப் பலவழியாகவும், இயைபுண்டு கிடக்கின்றன. கண்ணரம்பு கண்ணருகிலுள்ளதாய்ப் பாவையை இயக்கும் இயக்கநரம்போடு தொடர்புண்டுகிடக்கின்றது. இஃது அடிநிலைவட்டம். அக்கண்ணரம்பேபின்னும், தலை கழுத்து முதலியவற்றைப் பலவகையாகத் திருப்பும் பலவகை இயக்கநரம்புகளோடும் பல வழியாகவும் தொடர்புண்டு கிடக்கின்றது. இஃது இடைநிலை வட்டம். ஒளி கண்ட பொழுது கண்ணிலுள்ள பாவையானது சுருங்குகின்றது. இஃது அடிநிலை நரம்பு வட்டத்தின் பயன். கழுத்தையும் தலையையும் அவ்வொளி வரும் வழியாகத் திருப்பிப்பார்ப்பதோ இடைநிலை நரம்புவட்டத்தின் பயன். இடைநிலை நரம்புவட்டம் சுற்றுவழியாக இருப்பதோடு பலவழிகளோடு தொடர்புண்ட சிக்கல் வழியாகவும், காணக்கிடக்கின்றது. பல நரம்புகள் பல வகையாக இயைந்து தோன்றுகின்றன அல்லவா? அடிநிலை நரம்புவட்டமோ, குறுக்குவழியாக விளங்குவதோடு வேறு பிறவற்றோடு இணையாத தனி நேர் வழியாகவும் அமைந்துள்ளது. இடைநிலை நரம்புவட்டத்தொடர்பானது பின்னெழுந்த தொடர்பான்தினாலே அடிநிலை நரம்புவட்டத் தொடர்புபோல அத்துணை நிலைபேறுனதன்று, களைப்பு முதலியவற்றால் எளிதில் தடைபடக்கூடியதேயாகும். இவ்விடைநிலை வட்டத் தொடர்பை நாம் நம்முயற்சியால் அடக்கியாளலாம். அடிநிலை வட்டத்தொடர்பை அங்ஙனம் அடக்கியாளுதல் இயலுவதில்லை. ஒளியைக்கண்டு கண்ணிலுள்ள விழிப்பாவை தானாகவே நம்மையும் அறியாமலே குவிகின்றது. இதனைத் தடுப்பதோ இயலுவதொன்றன்று. ஆனால் ஒளிவழியாகத் தலையைத் திருப்பிக்காணும் இடைநிலைவட்டச் செயலையோ நாம் தடுக்கலாம், ஒளி வரும்வழியே தலையைத் திருப்பாது நிற்கலாம். இடைநிலை வட்டவழியாக எழுகின்ற மடக்குக்களே புலமடக்குகள் எனப் பெயர் பெறுகின்றன. அடிநிலை வட்டமடக்குக்களே வெறும் மடக்குக்களாகும். பொதுவாக வெறும் மடக்காய் விளங்குவனவும், ஏதேனும் புது நிலை ஏற்பட்டபோது புலமடக்காக (Sensation Reflexes) மாறிவிடுகின்றன. நாம் மூச்சுவிடுவது அடிநிலை மடக்காகும். நம்மையும் அறியாமல் மூச்சுவிடுகின்றோம். ஆனால் குருதிஈரல் வலி குன்றுவதனாலோ, இருக்கும் இடத்தில் உயிர்க்காற்று குறைபடுவதனாலோ முன்போல மூச்சுவிடுவது அருமையாகின்றது. இப்புதிய நிலையில் ஒவ்வொரு முறையும் மூச்சுவிடுவதை நாம் உணர்கின்றோம். முயற்சியோடும் மூச்சுவிடுகின்றோம். இந்த நிலையில் மூச்சு விடுவதை நாம் அடக்கி யாள்கின்றோம். ஆதலின் அடிநிலை வெறுமடக்கு, இடைநிலைப் புலமடக்காய் மாறிவிடுகின்றது. இவ்வாறே விழுங்குதல் இருமுதல் முதலிய வெறு மடக்குக்களும் புலமடக்குக் களாகின்றன. ஆனால் வெறுமடக்குக்கள் அனைத்தும் இவ்வாறு புல மடக்காக மாறுகின்றன என்று சொல்வதற்கில்லை. குருதிஈரலின் துடிப்புக் கழலைகள் நீரூறுதல், குருதிக் குழைகளின் துடிப்பு, முதலியவற்றை அடக்கியாளுதல் இயல்வதொன்றன்று. ஹடயோகம் கைவரப்பெற்றவர்கள் அவற்றையும் அடக்கியாள்கின்றார்களாம்.

நம்மைச்சுற்றிலும் உள்ள பல பொருள்களும் நம்மைத் தாக்குகின்றன. பல புலன்களும் பல புலமடக்குக்களும் எழுகின்றன. ஆனால் இவற்றில் யாதானும் ஒன்றுதான் மனத்தெதிர் உள்ப்படுபொருளாய் விளங்குகிறது. மற்றையவற்றை நாம் கருத்தாய்க்காணாமற்போனாலும் அவை நமது மனதில் எல்லைப்புறத்தே உலவுகின்றன. நான் ஓர் அட்டையை முழுந்தாள்மேலிருத்திக்கொடு அதன்மேல்தாள்களைவைத்து ஒருகையால்தலைப்புறத்தே பிடித்துகொண்டுமற்றொருகையால் எழுதிக்கொண்டுபோகின்றேன். எழுதுவதில் நாட்டம் வைத்த நான், என்னுடைய எண்ணத்தொடர்களை மட்டுமேகருத்தாய்ப் பின்தொடர்ந்துபோகின்றேன். தெருவில் போகும் வண்டியின் ஒலி, மக்கட் பேச்சு, முதலியவற்றை யான் கேட்பதில்லை. கண்ணில் ஒளி விழுகின்றது. அதனையும் கருத்தாய்க் காண்பதில்லை. அட்டையைப் பிடித்திருக்கின்ற கைக்கு அழுத்தமும் நெகிழ்ச்சியும் புலனாகின்றன. ஆதலின் நெகிழாதபடி இருகப் பிடித்துக்கொண்டிருக்கின்றது. நான் எழுதும் எழுத்துக்களின் வழியே எனது விழிகள் என்னையுமறியாமல் உலவுகின்றன. இச்செயல்கள் அனைத்தும் புலமடக்கன்றோ? ஆகவே புறப்பொருள் தாக்கலால், புலன்கள் எழுவதோடு புலமடக்குக்களும் எழுகின்றன.

வி. பி. வரவேண்டுமென்று காக்காமல், 1931-வது ஆண்டின் சந்தாவை மணியார்டர் மூலம் அனுப்பிவைக்குமாறு நண்பர்களைக் கேட்டுக்கொள்கின்றோம். அப்படிச் செய்வார் உதவியை யாம் மிகப் பாராட்டுவோம்.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்— 3. கைகேசி சூழ்ச்சிப் படலம்.

[994-வது பக்கத் தொடர்ச்சி]

புனைவதுங் கலைப்பதும் புலவருக் கருமையோ.

தாதி கூனியின் கடுநிகர் கொடுமொழிகளை வேதமே யெனக்கொண்ட கைகேசி, வேந்தன் வயின் தன்னிரு வரக்கடன்களை வாங்குதற்குரிய சூழ்ச்சியைச் சிந்தித்தனளாய்,

"வான வார்மழை நுழைதரு மதிபிதிர்ப் பாள்போற் சோனை வார்குழற் கற்றையிற் சொருகிய மாலையைச்" சிதைத் தெறிந்து,

விளையுந் தன்புகழ் வல்லியை வேரறுத் தென்னக்
கிளைகொண் மேகலை சிந்தினள் கிண்கிணி யோடும்
வளைது றந்தனள் மதியினின் மறுத்துடைப் பாள்போ
லளக வாணுத லரும்பெறற் றிலதமு மழித்தாள்

[விளைகின்ற தன் புகழாகிய கொடியை வேரோடு அறுத்து எறிந்ததுபோல, தனக்கினமான அணிகலன்களோடு சேர்ந்து அழகு செய்யும் மேகலாபரணத்தைச் சிந்தினள். கால் சதங்கைகளையும் கைவளைகளையும் எறிந்தனள். சந்திரனில் உள்ள மறுவைத் துடைத்தாள்போல், கூந்தல் புரண்ட தன் ஒளி பொருந்திய நெற்றியில் அணிந்திருந்த பெறுதற்கரிய திலகத்தையும் அழித்து விட்டாள்.]

அதன் பின், மற்றுளகலன்களை யெல்லாம் முற்றுற வேறு வேறகற்றி, அவிழ்ந்த கூந்தலோடும் பூவுதிர்ந்ததோர் கொம்பெனப் புவிமிசைப் புரண்டாள் என்பர் கம்பர். புலவர் பெருமக்கள் தம் கைகொண்டு அணிகலன்களால் புனையப்பெற்ற குலமகளிர் எத்தனையோ பலர். அவரவர் அவ்வப்புலவரது புண்ணிய கைவண்ணத்தின் திறமைக்கேற்பச் சிறப்புற்றுத் திகழ்ந்தனர். எனினும் செய்த கோலத்தைச் சிதைத்துக் காட்டிய சித்திரமுடையார் கம்பநாட்டாழ்வார். இருவகையும் புரியும் பான்மையராயினும் ஒருமையே நினைக்கும் நீரார் உத்தமக் கவிகளாதலால்,

வண்ணஞ்செய் கூந்தற் பார
வலயத்து மழையிற் றோன்றும்
விண்ணின்ற மதியின் மென்பூஞ்
சிகழிகைக் கோதை வேய்ந்தார்

என்று மணமகள் சீதையின் திறத்தில் முன்னர் உரைத்த மதியினது உவமைக்கிணங்கியே இங்குக் கைகேயி மதியினைப் பிதிர்த்தாலன்ன மாலையை வீசலானாள். பின்னர்ப் பயனாறு செய்யுள்களுக்கப்பால் முகமதியின் மறுவேயாய்த் திலதத்தைச் செப்ப வேண்டி நிற்பதை நினைத்தோ, முன் சீதைக்கு அணிந்த ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் உட்பொருள் உவமை உரைத்து வந்த இப்புலவர், திலகத்தைச் செப்பவருங்கால்,

மொய்வளர் குவளை பூத்த
முளரியின் முளைத்த மூன்னாள்
மெய்வளர் மதியி னுப்பண்
மீனுண்டே லனைய தேய்ப்ப
வய்யக மடந்தை மார்க்கு
நாகர்கோ தையர்க்கும் வானத்
தெய்வமங் கையர்க்கு மெல்லாந்
திலகத்தைத் திலகஞ் செய்தார்.

[வண்டுகள் வளர்கின்ற குவளையாகிய கண்கள் மலர்ந்திருக்கின்ற தாமரைபோன்ற முகத்தில் மூன்றாம் நாள் வளர்பிறைச்சந்திரன் அனைய நெற்றியின் நடுவில் ஒரு நக்ஷத்திரம் இருக்கக்கூடுமானால் அதுபோல், பூலோக மாதர்களுக்கும் நாக கன்னியர்க்கும் வானுலக மங்கையர்க்கும் சிறந்த திலகம் போன்றவளாகிய சீதைக்குத் திலகம் இட்டனர்]

என்று சந்திரனிடைப் பொலிந்த தாரகையாகத் திலகத்திற்கோர் இல்பொருளுவமை தேடி யமைத்தனர். மறுத்துடைத்த மதியமன்ன முகத்து மங்கை வடிவத்தால் அழகுடையவளாயினும் இதுபோது கரவுடைய நெஞ்சத்தளாய்த் தீயவையாவினும் சிறந்த தீயள் என்னும்படி கிடக்கின்றாளாதலின் பொலிவெலாம் போனதாகத் திருமாமகளின் தவ்வையே புலவர்பிரான் கம்பர் தம் கண்களுக்குத் தோன்றலாயினாள்.

அன்னவள் இந்நிலையளென்ன வோரா மன்னவன் வந்தெய்துங் களத்தினை வான்மீகி முனிவர் சிறிது மாற்றினாராய் அவளைக் கொண்டு போய்க் கோபாகிரகத்துள் சேர்த்தனர். கொழுநர்பால் ஊடிய மடவார் சென்று தம் சீற்றத்தை மென்று மென்று கொண்டிருப்பதற்கெனவே ஓர் அறை வடமொழி மனை நூலில் அமைக்கப் பெற்றிருந்தது போலும். தலை நோவு திருமாறு புலிப்பால் முதலியன கொணரும்படி மனைவியர் தம் கணவன்மாரை ஏவுமிடம் இதுவே யாதல் வேண்டும். கம்பரது மனை முறையில் இத்தகைய பொல்லாத இடமெதுவும் இல்லாமையாலே, கூனி போயபின் கைகேயி அங்ஙனே தன் கோலத்தை அழித்துவிட்டு விழுந்து கிடந்தாள். அவ்வயின் வந்தடைந்த அரசர் பெருமான் எத்துயர மிவளைத் தொடர்ந்ததோவெனப் பரிவினோடும், மானை எடுக்கும் ஒரு ஆனையைப்போல் அவளைத் தன் தடங்கைகள் கொண்டு தழீஇ எடுக்கலுற்றனனாயினும், அவ்வஞ்சகக்கள்வியோ மஞ்சிடைத்துவளும் மின்னென அவன் கை கழன்று மண்ணில் வீழ்ந்தனள்

எளிதிற் களைதற்குரியதோ ரின்னல் அவளுற்றாள் என்ன மன்னவன் உடனே உணர்ந்து கொண்டான். இதனாற் சால அஞ்சினனாய்,

என்னை நிகழ்ந்ததிஞ் ஞால மேழில் வாழ்வார்
உன்னை யிகழ்ந்தவர் மாள்வ ருற்ற தெல்லாம்
சொன்னபின் என்செயல் காண்டி சொல்லி
[டென்றான்.

"அடித்தாரைச் சொல்லி யழு, ஆக்கினைகள் செய்துவைப்போம்" என்ற பொருளே உடையதேனும், தாலாட்டுங் குரலில் வந்ததன்று இவ்வாக்கியம். மூப்பினாற்றயரதன் எய்தி நின்ற மனத்தளர்ச்சியைக் காட்டுவது இதன் கருத்தாகும். தன்னிலை தளராத் தனிப்பேராற்றலுடையவனா யிவனிருந்த காலத்தில் தன்னையேனும் தன்னுயிர் மனையாளை

யேனும் ஒருவர் இகழ்தல்கூடும் என்ற நினைவே இவனுக்குத் தோன்றியிராது.

இறந்திலன் செருக்களத் திராமன் தாதைதான்
அறந்தலை நிரம்பிமூப் படைந்த பின்னருந்
துறந்தில னென்பதோர் சொல்லுண் டாயபின்
பிறந்தில னென்பதிற் பிறிதுண் டாகுமோ

என இவன் தன்னைச் சிலர் இகழ்வார்என்ன முன்னர் அஞ்சியதற்கேற்ப இங்குத் தன் தேவியை நிந்தித்தாரொருவர் இருந்திருத்தல் கூடுமென நினைத்ததெல்லாம் அவன் அடைந்த மூப்பின் காரியமேயன்றி வேறன்று. முதுமையால் யாக்கையும் மனமும் தளரத் தளர வாக்குமாத்திரம் பன்னிப்பன்னிப் பேசும்வண்ணம் வளர்கின்ற இயற்கைக்கிணங்கத் தயரதனை இச் சந்தர்ப்பத்தில் ஒரு பாவமும் அறியாத கிழவர் என்றழைக்கின்ற வான்மீகிமுனிவர் பின்வருமாறு அவனைப் பரிவுரைகள் கூற வைக்கின்றார்:—

"தேவி, நீ என்பேரில் யாது காரணத்தாற் கோபம் அடைந்திருக்கின்றாயோ, அது எனக்குத் தெரியவில்லை. உன்னை யாவர் நிந்தித்தார்கள்? அல்லது அவமானம் பண்ணினார்கள்? நீ ஏன் இவ்வண்ணம் பூமியிற் புரண்டுகொண்டிருக்கிறாய்? உன்னை இந்த நிலைமையிற் பார்க்க எனது மனம் வேகின்றதே! உன்னிடத்திலே அன்புவைத்த என் முன்னே எனது மனந் துடிக்கப் பிசாசுபிடித்தவள்போற் புழுதிபடிந்த பூமியிற் புரளுவது உனக்குத் தக்கதா? சமர்த்தர்களாயும் மனமுவந்தவர்களாயு மிருக்கும் அநேக வைத்தியர்கள் என்னிடத்தில் இருக்கின்றார்கள். உனக்கு ஏதாவது நோய் என்றால் உடனே சொல்வாய்; அவர்களைக் கொண்டு நான் அதை ஒரு நொடியில் தீர்த்துவைக்கின்றேன். உனக்கு நன்மை செய்தவர் யாவர்? தீமை செய்தவர் யாவர்? உன்னிடத்திலிருந்து யார் நன்மையைப் பெறவேண்டும்? யார் தீமையைப் பெறவேண்டும்? நீ அழவேண்டாம். உனது தேகத்தை வருத்தாதே. யாருடைய தலையையாவது வாங்கிவிடவேண்டுமோ? அல்லது தலைவாங்கக் கட்டளையிடப்பட்ட எவனையாவது அந்தத் தண்டனையிலிருந்து நீக்கிவிட வேண்டுமோ? எந்த ஏழையையாவது செல்வவானாக்க வேண்டுமோ? அல்லது எந்தத் தனிகனையாவது வறியவனாக்க வேண்டுமோ? நானும் என்னைச் சேர்ந்தவர்களெல்லாரும் உன் இஷ்டப்படி நடப்பவர்களே. நீசொல்வதற்குப் பிரதிகூலமாய் ஒருநாளும் நடக்க நான் பொறேன். என் பிராணனைக் கொடுத்தாவது உனது வேண்டுகோளை நான் முடித்துவைக்கின்றேன். உனக்கு என்னிட மிருக்குஞ் செல்வாக்கு உனக்கே தெரியும்; ஆகையாற் சந்தேகமே வேண்டா. உன்னுடைய மனத்தை எப்படியாவது நான் சந்தோஷப்படுத்தி வைக்கின்றேன். இதைப்பற்றி எனது புண்ணியத்தின் மேலும் சத்தியம் பண்ணுகின்றேன். சூரியனுடைய தேர்ச்சக்கரம் எதுவரையிற் சுழல்கின்றதோ அதுவரையில் என்னுடையது இவ்வுலகம். கீழ்த்தேசங்கள், சிந்துதேசம், ஸௌவீரம், ஸௌராஷ்ட்ரம், தென்தேசம், வங்கம், அங்கம், மகதம், மத்ஸ்யம், செழுமையாகிய காசி, கோசலம் இத்தேசங்களில் தனதானியாதி அநேகம் பொருள்கள் உண்டாகின்றன. இவைகளுள் உனக்கு எது வேண்டுமோ அதைக் கேட்பாய். நீ கவலையுறாதே. எழுந்திரு, எழுந்திரு; கட்டழகி, அச்சப்படுபவளே, உனக்கு என்ன பயம் வந்தது? சொல்வாய்; சூரியன் பனித்துளிகளை அகற்றுவது போல அதை ஒருநொடியில் அகற்றிவைக்கின்றேன்"

இது முற்றிலும் "உன்னை யிழந்தவர் மாள்வர்" என்பதில் அடங்கவில்லையாயினும், அக்கருத்தையே பெரும்பாலும் கம்பர் இரண்டு மூன்று சொற்களால் உரைக்க வைத்தார்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,

நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.

சோல் ஏஜண்டுகள்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்.

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்



டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (1-8-0) பிரான்சு:

டிப்போ, பம்பாய்
கல்கத்தா

NANJANGUD TOOTH POWDER
SADVAIDYASALA, NANJANGUD

மதுரை.
காஞ்சீபுரம்.

பெரிய புராண நுட்பம்.

ஸ்ரீமான் கதிரேசஞ் செட்டியார்.

கல்வி, அறிவு, ஒழுக்கம் ஆயநலம்படைக்கப்பெற்ற பண்டிதர்கள் தங்கள் ஒய்வு நேரங்களிற் சொற்பொழிவுகள் வாயிலாக இலக்கியங்களில் உள்ள அழகுகளை எடுத்துக் கூறுவதாலே பொதுஜனங்களுக்கு இலக்கியங்களில் வேட்கை உண்டாக்கலாம். இதற்குச் சான்றாகச் சென்ற 31-12-30 அன்று இராயப்பேட்டைக் குகானந்த நிலையத்தில் ஸ்ரீ பாலசுப்ரமண்ய பக்தஜன சபையின் சார்பில் மகிபாலன் பட்டி ஸ்ரீமான் மு. கதிரேசஞ்செட்டியார் "பெரியபுராண நுட்பம்" என்ற பொருள்பற்றி நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு:—

பெரியபுராணத்தைப் பாடிய சேக்கிழார் சுவாமிகள் தமிழ் இலக்கண இலக்கியங்களில் தேர்ந்த பெரும் புலவர்களுள் ஒருவர். அவருடைய காலத்தில் தமிழரும் தமிழ்நாட்டு மன்னரும் ஜீவகசிந்தாமணி முதலிய நூல்களி லீடுபட்டிருந்தனர். அவர்களைச் சைவநெறியி லீடுபடுத்தும் நோக்கத்துடன் சேக்கிழார் சுவாமிகள் முயன்று பெரிய புராணம் பாடியதாகத்தெரிகிறது. ஒருமனிதனுடைய வாழ்க்கை நிலையைச் சீரிய வகையில் அளந்துரைத்தவர் கம்பர். அவர் பல ஊர், பல நாடுகள், பலவிதமான கதா நாயகர்கள், பலவிதப் பழக்க ஒழுக்கங்கள் ஆகியவைகளை அவரவர் நிலையில் நின்று உரைத்திருக்கிறார். பெரியபுராண மியற்றிய சேக்கிழார்சுவாமிகள் பல வகைப்பட்ட அடியார்களின் திறத்தை அவரவர்கள் மனநிலையினிற்கு ஏற்றபடி உரைத்திருப்பதே அவர் பெருமையை விளக்கும். அப்பெருமை அளவிடற்கரியதென்பது உமாபதிசிவாசாரியாரது புகழ் மாலையால் விளங்குகிறது. சிவனடியார்களைப் பற்றிச் சுந்தரமூர்த்திசுவாமிகளும் நம்பியாண்டார் நம்பியும் செய்த பாட்டுக்களிலிருந்து அடியார் வரலாற்றைச் சேக்கிழார் பெரியபுராண வாயிலாக விரிநூலாக்கினார்.

"உலகெலாம்" என்ற சொல் ஆண்டவனருளியதாகையால், அதைப் புராணத்தின் இடையிலும் வைத்துப் புராணத்தை முடிக்கும்போதும் "உலகெலாம்" என்று சொல்லி முடித்திருப்பதாகத் தெரிகிறது.

ஒரு கவியின் பெருமையைக் கவியுள்ளம் படைத்த கவிகளே அறிவர். ஆகவே, சேக்கிழார்சுவாமிகளுக்குப் பின்வந்த பெரும் புலவர்கள் சேக்கிழார் சுவாமிகளை வியந்து பாடியிருக்கிறார்கள் என்பதைக் காண அவரது கவித்திறம் நன்கு தெரியவருகிறது. உதாரணமாக, சிவஞான முனிவர்சேக்கிழார் சுவாமிகளைப் பற்றி மிக அழகாகப் போற்றிப் பாடியிருக்கிறார்.

பெரியபுராணத்தைச் சேக்கிழார் சுவாமிகள் எழுதும் முறையே வியத்தற்குரியது. ஓரடியாரின் வரலாற்றை உரைத்து முடித்ததும் வேறோரடியார் வரலாற்றைப் பாடாது, அவ்வடியாரின் திருத்தொண்டைத் தான் பரவுவதாகவும் அவ்வடியாரின் திருவடியைத் தன் சிரமேற்கொண்டு போற்றுவதாகவும் கூறியிருக்கின்றார். ஆகவே புராணத்தைப் பாடியதில் எவ்வளவு பற்றுடன் பாடியிருக்கின்றார் அவர் என்பது தெரிகிறது. அடியார்வரலாறு பாடுவதால் தான்பெறும் நற்பேறு யாதென அவ்வப்போது அவர் கூறுவதுண்டு. "என் வினைகளெல்லாம் கெட இவ்வடியாரின் பெருமையை உரைப்பேன்" என்று ஓரிடத்திலும், அடியாரின் வரலாற்றை உரைக்கும் தன் பிறப்புக்கே வணக்கம் கூறுவதாக மற்றோரிடத்திலும் கூறுவதினின்றும் அவர் அடியார் வரலாற்றைப் பாடியதில் கொண்டுள்ள ஆர்வம் விளங்குகின்றது.

கவிகள் தம் பாடல்களுக்கு அழகேற்ற அணிகளைப் பிரயோகிப்பதுண்டு. அவைகளில் முக்யமானவை தன்மைநவிற்சி அல்லது இயற்கையழகு உரைத்தலும் உவமையணியுமாம். உவமை அணியைப் பல புலவர்கள் எடுத்தாண்டிருப்பினும் சேக்கிழார் சுவாமிகளைப்போல் வேறொருகவி அதை உபயோகிக்கவில்லை. குணப்பொருளைவிட குணிப்பொருளை உவமைபாகக் கூறுவது பெரும் புல்வர்களாலேயே முடியும். இதைச்சேக்கிழார் சுவாமிகள் அநேக இடங்களில் காட்டியிருக்கிறார்.

திருஞானசம்பந்தர் புராணத்தில் திருச்சிற்றம்பலத்திற்கு ஞானத்தையே உவமானமாகவும் ஞானத்தால் பெறப்படும் ஆனந்தத்திற்குத் திருக்கூத்தே உவமானமாகவும் காட்டியிருக்கின்றார். கண்ணப்ப நாயனார் மலர்கொய்துகொண்டு திருக்கோயிலை நோக்கிச் செல்லும் வேகத்திற்கு ஈசனை அடைய எண்ணிய அந்த நாயனாரின் பரிவுள்ள மனதையே உவமானமாக்கி உவமான உவமேயப் பொருள்கள் இரண்டையும் நயம்பட உரைத்திருக்கிறார்.

உவமானங்களை உரைக்கையில் அவ்வவ்வடியாரின் வாழ்வுநிலை பிறப்புநிலைகளுக்கேற்றபடி உரைத்திருப்பதும் நோக்கத்தக்கது. கண்ணப்பர் சிவமூர்த்தியைக் கட்டிக்கொண்டு விடாமலிருப்பதை உடும்புபற்றிக் கொள்வதற் கொப்பிட்டது வேடர் நிலைக்கேற்றதாயிருக்கிறது. திருஞானசம்பந்தர் வைகையாற்றில் விட்ட ஏடு நீரோட்டத்தை எதிர்த்துச் சென்றது பிறவியாகிய நீரோட்டத்தில் அடியாரின் மனம் பிறவி வேகத்தை எதிர்த்துச் செல்வதொக்கும் என்றார். சண்டேசுரநாயனாரைப் பெற்ற தந்தைக்குப் பாம்பை உவமானமாக்கி, மாணிக்கத்தைத்தரும் பாம்பு விஷங் கொண்டுறைவதுபோல் சண்டேசுரரை ஈன்ற தந்தை கெட்டகுணத்தோடு விளங்கினான் என்றார்.

நாடு நகரங்களின் சிறப்பைச் சேக்கிழார் சுவாமிகள் வெகு அழகாகப்பாடியிருக்கிறார். சான்றாகத் திருஞான சம்பந்தர் புராணத்தில் சீகாழிப் பதியைப் பற்றிப் பாடிய 12 பாடல்கள் பன்னிரண்டழகுகளுடன் விளங்குகின்றன. திருஞான சம்பந்த சுவாமிகளின் அழுகைச் சைவநெறியே தழைத்தோங்குவதற்கிடமாயிருந்ததென்றும் பலபொருள்கள் தோன்றப் பாடியிருக்கிறார். கண்ணப்ப நாயனார் புராணத்தில் திருக்காளத்தி மலையை வர்ணித்துப் பாடியது பெரிதும் வியக்கத்தக்கது. அவ்வர்ணனையே சைவக்கொள்கைகளை விளக்கும் பெற்றியதாகும்.

அடியார்களுக்கு வரும் துன்பத்தை உரைக்கையில், சேக்கிழார்சுவாமிகளுக்கு உடல் நடுக்கமுண்

டாகு மியல்பும்ஆங்காங்குத் தெரிகிறது.மேலும் அவர் மனிதர் மனோ நிலைகளைப் பலவிதமாகப் பல விடங்களில் எடுத்துக் காட்டியிருக்கிறார். தத்துவப் பொருள்களையும் சைவ சித்தாந்த நெறிகளையும் வெகு தெளிவாக உரைக்கும் பாடல்கள் தெய்வ மணம் கமழ்வதாயிருக்கின்றன. எல்லா நலங்களும் அமையப்பெற் றிருப்பதாலேயே மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை 'சேக்கிழார் சுவாமிகள் நூலாசிரியர் உரையாசிரியர் என்ற நால்வகை ஆசிரியருமாவர்' என்றுரைத்திருக்கிறார்.

இடையிடையே சொற்பொழிவாளர் பண்டித மணி அவர்கள் பெரியபுராணத்தினின்று அநேக அழகியபாடல்களைப்படித்து மகிழ்வித்தார்கள். ஸ்ரீமான் ம.பாலசுப்ரமண்ய முதலியார் தலைமைவகித்துமுடிவுரைகூறுகையில் தமிழ்ப் பாடல்களில் இருவகைப்பாடல்களும் மிக்கு விளங்குகின்றன வென்றும், கற்பனை, உவமை அணி ஆகியவைகளுள்ள தமிழ்ப் பாடல்களைப்பற்றி ஆராய ஆராயப் படிப்போர்க்கே கற்பனைப் பொருள்கள் பல தோன்றுமென்றும், பெரிய புராணத்தைச் சமயக்கண் மட்டுமன்றி இலக்கியக் கண்ணுடன் படிப்போர்க்கு அதிலுள்ள இன்பம் மிகவும் அதிகமாக ஏற்படுமென்றும், அதனால் அப்புராணத்தின் சிறப்பு விளங்குமென்றும், இப்பேர்ப்பட்ட புராணத்தைத் தற்காலம் சிலர் தமிழின் அருமையும் அடியார் வரலாற்றின் பெருமையும் அறியாதவீணர்களாய்த் தம் தீயமனப்போக்கின்படி செய்யமுயல்வது மிக வருந்தத்தக்கதும் இரங்கத் தக்கதுமாமென்றும் கூறினர்.

'சுதேசமித்ரன்'

ஞானமொழிகள்.

வரும் வரும் என்று நூல்கள் கூறும் மூப்பு வரக்கண்டும், குயிலொத்த குஞ்சி கொக்கொத்தும், தளிரொத்த மேனி சருகொத்தும் முத்தொத்தன முற்றிய சுரைவித்தொத்தும், நிமிர்ந்தன சரிந்தும் இனியன இன்னாவாயும் நோயும் பாயும் இடங்கொண்டும் கண் பஞ்சடைந்தும், 'வேண்டா' உலக வாழ்வு வேண்டா, எனத் தலைநடுங்கியும் வரக்கண்டும் ஆசையை நீக்கினையில்லை. கோபத்தைக் குறைத்தாயில்லை. காமத்தைப் போக்கினையில்லை. என்னே மலவலி! மனிதா! உயிர் வெளிப்படுமுன் முருகன் அருள் வெளிப்பட்டுத் துணைசெய்யும் வழியைத்தேடு.

வருவது வரும். வாராதேயெனில் நிற்பதில்லை. வாவெனின் வருவதில்லை. அஞ்சினால் விடுவதுமில்லை. இடுக்கண் வரின் நகுவாய்; பின் நீ இன்பமேபடைவாய்.

அன்பனே! வேதனைகள் வந்தாலும் பகைவர் நலிந்தாலும் வெய்யகொடு மிடியெலாம் மிகுத்து வருத்திடினும், சூதெவர்கள் புரிந்தாலும் பிறர் வழியாலெய்து துன்பங்கள் சூழ்ந்திடினும் சூழ்ந்திடுக. வேறு தீது புரி நாள் கோள்கள் சினந்தாலுஞ் சினக்க, தெய்வந்தான் சீறிடினுஞ் சீறிடுக, எல்லாம் ஒது பல பிறவிகளிற் செய்த வினையன்றி ஒருவரினும் பிழையில்லை என் அறிந்தாயாயின் ஒன்றுக்கும் வருந்தாய். இன்பமுறுவாய்.

இடுக்கண் வருங்கால் அது நாணச் சிரிக்க இருந்தேங்கி அழுது நோவதால் பயன் எள்ளளவுமில்லை. இன்பம் வரும்பொழுது அதன் நிலையாமையை எண்ணி அழுதிடுக. பின் இருவினையுமகன்று போகும். நீங்க, எழில்வேற் படையா லசுரர்மார்பு கீண்டு விண்ணவரை வாழ்வித்த வெற்றிமயில் வீரன் தொடுத்த மலர்மாலை யணிபாதிரண்டு புயமுந் துணையென்று கடைப்பிடித்தாயாயின் துணிவு பிறக்கும்.

என்றும் உயிர்க்குயிராய் முருகன் மேவியிருக்கின்றான். அகக் கண்ணின் ஒளியை மலமாகிய இருள் மறைக்க, அவன் நிற்கு நிலை தெரியாது மயங்கி இருள் வழியே பற்றுக்கோடாய் அவ்வழியே சென்று குழியினிலே விழுந்தாய். ஆனால் முற்றவங்கள் ஒரு சிறிது செய்த பயனாக முருகனை வணங்கும் பேறு பெற்றாய். ஆதலால் குற்றமுறு நெறிதனிலே போகவிடா தருளின் குணநெறியே புகுமாறு அவனை வேண்டு. வேண்டும் வரங்களைக் கொடுத்தாள்வான். தன்நோய் தனக்குத் தெரியாத ஓர் குழவி மரணத்தைத் தரும் ஓர் நோயினால் பீடிக்கப்பட்டு வருந்துகின்றபொழுது, அதனை அறிந்து இரங்கிய தந்தை தாயர் நோய்க்கேற்றதாகிய கைப்பு மருந்தூட்டுங்கால் அதனை உண்ண விரும்பாததாய்க் கையினாற் றட்டியும் வேண்டாம் என்று அழுதும் மறுத்தாலும், கருணை உடைய பெற்றோர் கையைப்பிடித்து அமர்த்தியும் அச்சுறுத்தியும் அம்மருந்தை ஊட்டுவாரன்றே! ஊட்டாக்கால் நோய் தீருமோ? அங்ஙனம் அவர்கள் ஊட்டினும் அன்புடையவரேயாவர்.

வைத்திய ரத்ன பண்டிட்
டி. கோபாலாசார்லு அவர்களின்

ஜீவா மிருதம்.

(இன்ப வாழ்க்கைக்கு ஏற்ற ஔஷதம்)

சென்ற 33ஆண்டுகளாகப்பலராலும் மிகவும் போற்றப்படும் அரிய டானிக் இதுவே. சுத்தமான விலையுயர்ந்த மூலிகைகளினாலும், லோக சத்துக்களாலும் கோடிக்கணக்கான இந்தியர்களின் பலஹீனத்தையும் கஷ்டங்களையும் போக்கி இன்பத்தை அளிக்கப் பண்டிட்ஜி அவர்களால் மிகவும் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட உயர்ந்த மருந்து. பலஹீனம், நரம்புத் தளர்ச்சி, அஜீரணம், காதிரைச்சல், மலச்சிக்கல், ஞாபகமின்மை, சோகை,முதலியஎல்லாநோய்களையும்நீக்கித் தேகத்திற்கு வலுவையும், மூளைக்குச்சுறுசுறுப்பையும், முகத்திற்கு அழகையும் கொடுக்கக் கூடியது. எல்லா இடங்களிலும் கிடைக்கும். கியாட்லாக் இனம்.

புட்டி 1-க்கு விலை ரூ. 3 4 0

தந்தி விலாசம்:— "பண்டிட்" | தபாற் பெட்டி நெ:— 287.
டெலிபோன் நெ:- 2191

ஆயுர்வேத ஆஸ்ரமம்,
151, கோவிந்தப்ப நாயகன் தெரு,
ஜி. டி. சென்னை.

OUR OWN PUBLICATIONS

THE ARAVIDU DYNASTY OF VIJAYANAGARA Vol. 1. 1542-1614

by THE REV. HENRY HERAS, S.J., M.A., Professor, Indian History, St. Xavier's College, Bombay, with a preface by SIR RICHARD CARNAC TEMPLE, BT. **Rs. 10**

The History of the Aravidu Dynasty of Vijayanagara could properly be entitled 'The Forgotten Dynasty of the old Forgotten Empire,' Mr. Robert Sewell devoted three chapters to the history of this dynasty and Fr. Heras promises three big volumes of which this is the first. From the time of Mr. Sewell's publication it has often been repeated that the Empire of Vijayanagaramet its end onthe field of Talikota,in 1565. The present work discloses that the Empire continued in its splendour for several years. The author shows moreover that this period marked the climax of the Telugu domination over the most southern part of the peninsula of India.

THE LAW AND THEORY OF RAILWAY FREIGHT RATES

by K. C. SRINIVASAN, M.A., F.C.S. **Rs. 10**

THE POLITICAL PHILOSOPHIES SINCE 1905

by POF, BENOY KUMAR SARKAR, M A, **Rs. 4**

ECONOMIC DEVELOPMENT :

Snap-shots of World movements in Commerce, Economic Legislation Industrialism and Technical Education *by* PROF. BENOY KUMAR SARKAR Recommended by the Calcutta University for M.A. in commerce and in Allahabad University as a Reference book. **Rs. 8**

LIFE OF BARRISTER SAVARKAR

by CHITRA GUPTA, The story of the life of this famous patriot written by a close friend is packed with thrilling incidents, of how as a Leader of the revolutionist party, he led the movement in India and in England,how he was arrested and his dramatic escape at Marseilles by jumping out through the port-hole of the ship. A book of enchanting interest and full of interesting lessons to our New India. **Rs. 1-8**

HINDU-PAD-PADASHAHI.

or a Critical Review of the Hindu Empire of Maharashtra by VINAYAK DAMODAR SAVARKAR. with an introduction by Dr. R. C. MAZUMDAR, M A., Ph. D., Dacca.

by V. V. OAK B. A., S. T. C. Pp. 1 to 24X168. This book deals about the educational policy pursued by the Government of India during the last 100 years in which Mr V V. Oak, has attempted to draw a realistic picture of the educational position in India as compared with the other civilised countries, by means of graphical illustrations and tabular statements. **Rs. 2**

1. கோபால் புதிய தமிழ் வாசக முதல் புஸ்தகம் ஆ. மா. ஸ்ரீ. இராகவன் B. A. L. T. ... 0 2 6
2. கோபால் புதிய தமிழ் வாசக இரண்டாம் புஸ்தகம் 0 3 0
3. கோபால் புதிய தமிழ் வாசக மூன்றும் புஸ்தகம் 0 4 0
4. கோபால் புதிய தமிழ் வாசக நான்காம் புஸ்தகம் ... 0 4 6
5. கோபால் புதிய தமிழ் வாசக ஐந்தாம் புஸ்தகம் ... 0 6 0
6. ஆஞ்சநேயர்—ம. குப்புசாமி முதலியார் 0 5 0
7. சிறுமணிக் கதைகள்—எஸ். எஸ். அருணகிரிநாதர் 0 5 0
8. கம்பர் அல்லது கவியரசு- ஆ. நா. கன்னையா 0 5 0
9. தமிழ்ச் சிற்றிலக்கண வினுவிடை கா. ரா. கோவிந்தராஜ முதலியார் 0 4 0
10. சிறுவர் இந்து தேச சரித்திரம் வி. ஜயராம ஐயர் ... 0 5 0
11. வில்விக்ஸ் துரைத்தன விளக்கம் 1-பாகம் 4-வகுப்புக்குரியது—S. சுப்பிரமணிய ஐயர் 0 5 0
12. ஷை இரண்டாம் பாகம் 5-வது வகுப்புக்குரியது ... 0 6 0
13 கோபால் வாய்ப்பாடு ... 0 1 6
14. சூரவாதித்த சோழன், R. சாம்பசிவ சர்மா ... 0 12 0
15. புத்திமானே பலவான் ஏ. பரசுராமையர் ... 0 10 0
16. கிருஷ்ணதேவராயர் - கே. பி. சேஷாத்திரி ஐயங்கார்... 0 8 0
17. பகீரதன், ஆ. நா. கன்னையா ... 0 6 0
18. பத்திராயு அல்லது ஆட்சிக் குரியோன்-மே. வீ. வேணு கோபால் பிள்ளை ... 0 6 0
19. இலங்கேசன் - S. சீனிவாசையர்.... 0 6 0
20. **English Selection for Higher Forms.** illustrated Revised Edition **Re 1.**
21. **The New Era Story Books Series,** Book I by C. Gordon, B. Ed. **As. 3.**
22. Book II „ **As. 4.**
23. Book III „ **As. 5.**
24. **Nanda the Paraiah Saint** by C. S. Rangaswami Aiyangar B.A., L.T , **As. 3**
25. **Fables from Mahabharata** by N. Paramasivam Iyer B. A. L. T. **As. 3.**
26. **Chandrahasa** Revised by Prof. J. C. Rollo, M. A. **As. 6.**
27. **The Clay Cart** **As. 6**

V. P. Charges, Extra of the Prices.

B G. PAUL & Co., FRANCIS JOSEPH STREET, MADRAS.

அகராதிகள்.

	ரூ.	அ.
தமிழ்ச்சொல் அகராதி (உதாரணங்களுடன்)—மூன்று பாகம் ...	18	8
தமிழ்மொழி அகராதி The Coronation Tamil Dictionary	10	0

தமிழ் - தமிழ் - இங்கிலீஷ் அகராதி.

வி. விச்வநாதபிள்ளை இயற்றியது :: 676 பக்கங்கள்

எல்லாப் பதங்களுக்கும் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு சொல்லுக்கு மிருக்கிற பல பொருள்களும் அவைகளுக்கு நேர் நேரே ஆங்கில மொழிபெயர்ப்பும் கொண்டது. வி. பி. செலவு வேறு. விலை ரூபா 6 0 0.

:: திருக்குறள் ::

மூலமும், சொற்குறிப்பு அகராதியும், விஷய ஒப்புக் குறளும்; வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300-பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப்படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதன் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

வி. பி. செலவு வேறு. விலை அணா 12.

கலாநிலயம்,

11, வேளாளர் தெரு, புரசை, சென்னை.

ANCIENT JAFFNA

A Momentous Book

BY

MUDALIAR C. RASANAYAGAM c. c. s.

WITH A FOREWARD BY

Prof. S. KRISHNASAMI IYENGAR, M.A.,

An authentic History of North Ceylon particularly of Jaffna, based on Epigraphic Linguistic, Archeological researches is stated here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Isand by the Europeans and it reads like a romance.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0.

V. P. Charge Extra

KALANILAYAM

Purasawalkam, Madras.

ஒட்டக்கூத்தர் பாடிய

தக்கயாகப் பரணி

மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர் பதிப்பு.

(உரையுடன்)

இதுவரையில் அச்சேருத இவ்வரிய நூல் இப்பொழுதே வெளிவந்துளது. விலை ரூ. 4—0—0. வி. பி. செலவு வேறு.

விலாசம் :—கலாநிலயம் : 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

கம்பராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,

சே. கிருஷ்ணமாசாரியார்,

வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

பால காண்டம் ...	ரூ.	5.
அயோத்தியா காண்டம்	ரூ.	5.
ஆரண்ய காண்டம் ...	ரூ.	4.
கிஷ்கிந்தா காண்டம் ...	ரூ.	4-8.
சுந்தர காண்டம் ...	ரூ.	5.

(வி.பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,

11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய

கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார். போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில்உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. **1-0-0.** (வி. பி. செலவு வேறு).

மானேஜர் :—“ கலா நிலயம் ”,

11, வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :— கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
5. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
6. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
7. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மலர்வனம் பழமுதிர்சோலை, மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரிடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜினோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
2. அப்பர்:—கட்டுரைகள் 50
3. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
4. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது
5. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
6. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
7. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
8. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
9. நம்மாழ்வார் வைபவம்:— கட்டுரைகள் 12.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப்படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

3-வது வால்யூம் 1930-ஆம் ஆண்டுப் பிரதிகள்.

1. கம்பராமாயணம்:— மந்திரப்படலம், மந்தரை சூழ்ச்சிப் படலம் கட்டுரை 48.
2. குறுந்தொகை:— 400 பாட்டுகளும் உரையுடன் 34.
3. தமிழ்ப்பாடம்:—கிருஷ்ணன் தூது, நைடதம், நளன் தூதுப் படலம். இலக்கணம் புணரியல் முற்றுப்பெற்றது.
4. அப்பரும் 64 கலைகளும்:—36.
5. நம்மாழ்வார் வைபவம்:—34.
6. இலஞ்சிப்பாவை:—இதழ்கள் 24.
7. ஆச்சரிய சூடாமணி:—(ஒரு மொழிபெயர்ப்பு நாடகம்) 15.
8. மானதசாத்திரம்:—(நடத்தை) 32.
மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், சிறுகதைகள், மலர்வனம், பழமுதிர்சோலை, மாதவிமாதவம் ஆகிய பல கட்டுரைகள்.

மேற்கூறிய மூன்று வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப.
பையிண்டு செய்யாதது	8	0	0	பையிண்டு செய்யாதது	9	8	0
காலிகோ கில்ட்	9	8	0	காலிகோ கில்ட்	11	0	0
ஆப்லெதர் கில்ட்	10	0	0	ஆப்லெதர் கில்ட்	11	8	0

:: கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

வர்த்தமானம்

இந்தியச் சட்ட சபையில் தலைவர் பதவி வகித்தவரான ஸ்ரீமான் வி. ஜெ. பட்டேல் நேற்று விடுதலைப் பெற்றார் என்றும், இப்பொழுது அவர் சென்னையிலிருப்பதாகவும் தெரிகின்றது.

***

டில்லி இந்தியச் சட்டசபைக்குக் கீழ்க்கண்டவர்கள் உத்தியோகப்பற்றுள்ள அங்கத்தினராக நியமிக்கப்பட்டுள்ளனர்:—மிஸ்டர் ஜெ. வி. பிரஞ்சு, ஆர். பானர்ஜி ஜி. கே. அஹமத்கான், எ, பி. கான்துக்கானு, கே. எல். பிஹாமில்டன், ஜே. ஹாஸ்யட், ஈ ஏ. ரபாம்.

***

தேவகோட்டையில் சிறந்தவகை நடைபெறும் ஸ்ரீ சுவர்ணமூர்த்தி பெண் பாடசாலையின் அதிபரான திருவாளர் வெ. அழ. அழகப்பசெட்டியாரின் குமாரர் திருவாளர் சுவர்ண நாதன் செட்டியார் அவர்கள் தேவகோட்டை யூனியன் பஞ்சாயத்து சபையின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றார் என்று ஒரு நிருபர் தெரிவிக்கின்றார்.

***

டிசம்பர் மாதம் 26-ந்தேதி காசியில் அகில ஆசிய ஆசிரியர் மஹா நாடு கூடிற்று. ஆசியா கண்டத்தின் பல பாகங்களிலிருந்தும் பிரதிநிதிகள் மஹா நாட்டிற்கு வந்திருந்தனர். காசி மஹாராஜா மஹா நாட்டைத் திறந்து வைத்தார். புரபஸர் ராதாகிருஷ்ணன் இம்மஹா நாட்டில் தலைமைவகித்து, இத்தகைய மஹா நாடுகளால் நலனை எடுத்து விளக்கினர் என்று காசிச் செய்தி கூறுகின்றது.

***

கல்கத்தா கல்வி இலாக்கா டைரக்டர், அரசாங்க ஆதரவும் அங்கீகாரமும் பெற்ற எல்லாப் பள்ளிக்கூடங்களின் தலைமை உபாத்தியாயர்களுக்கு ஒரு சுற்றுக்கடிதம் விடுத்துள்ளாராம். அதில், மறியல் இலக்கத்திலும், அரசியல் கிளர்ச்சிகளிலும் தங்கள் பையன்கள் சேரமாட்டான் என்று உறுதி கூறுபவர்கள் வீட்டுப் பையன்களைத் தவிர மற்றவர்களைப் பள்ளியில் சேர்த்துக் கொள்ளககூடாதென்று அறிவித்திருக்கின்றாராம்.

***

ஒரு சோஸியம்:—ஜோஸ்ய வல்லுநரான ஒரு ஐரோப்பியர் அஸ்ஸோஸியேட் பிரஸ் நிருபரிடம் கூறியதாவது:—1931 வருடம் ஜுன் மாதம் முதல் இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் நல்ல காலம். இப்பொழுது கூடியுள்ள ஸர்வகட்சி மஹா நாட்டால் இரு நாட்டிற்கும் நன்மை யுண்டு. 1930 அக்டோபர் 21-ந் தேதி அன்று அமாவாசை அன்று முதல் இந்தியாவின் கோரிக்கை நிறைவேறும் நெப்டியூன், சனி, குரு, சுக்ரன், புதன் ஆகிய கிரங்கங்கள் நல்ல விடத்தில் இருக்கின்றன இதனால் இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் நலம் பல ஏற்படும்.

***

பம்பாய்ச்செய்தி ஒன்று கூறுவதாவது:—"கடந்த சில தினங்களாகப் பம்பாயில் பகலில் ஒரு பெரிய நக்ஷத்திரம் காணப்படுகின்றது. இந்த அதிசய நக்ஷத்திரத்தைக் காண ஜனங்கள் திரள் திரளாய்த் தெருக்களில் கூடுகின்றனர். காலை 10 மணிச் சுமாருக்கு சூரியன் காணப்படுமிடத்திற்கு மேற்கில் 60 டிகிரியில் காணப்படுகின்றது. டிசம்பர் மாதம் 24-ந்தேதியன்று இது முதன் முதலாகக் கண்ணில் தென்பட்டது. இந்த நக்ஷத்திரம் மெல்ல மெல்ல மேற்குத் திசை நாடி ஒரு மணிச் சுமாருக்கு மறைந்து விடுகின்றது. இதன் காரணம் இன்னும் புலப்படவில்லை. வான சாஸ்திரிகள் ஆராய்ந்து வருகின்றனர்."

***

'காசி ஹிந்து கலாசாலையின் சபையார்:—சர்வகலாசாலைக்குச் சேரவேண்டிய கிராண்டுத் தொகையைத் தருமாறு அரசாங்கத்தாரைக் கேட்டனர். பலதடவை கேட்டும் அரசாங்கத்தார் கிராண்டைக் கொடுக்கவில்லை. ஆனால் அரசாங்கத்தார் ஸ்ரீ மாளவியாவை வைஸ்சான்ஸலர் பதவியினின்று விலக்கிவிடும்படி சினேட் சபைக்கறிவித்தார்கள். சினேட் சபையின் ஒரு கூட்டத்தார் இவ்விஷயமாய் ஆலோசித்துத் தாங்கள் அப்படியொன்றும் செய்யமுடியாதெனத் தீர்மானித்தனர். பிறகு அரசாங்கத்தார் சர்வகலாசாலையின் பண நிர்வாகம் சான்ஸலர் உள்பட ஐவரைக்கொண்ட கமிட்டியால் செய்யப்பட வேண்டுமென்றும் அக்கமிட்டியில் இருக்கும் பிரதிநிதிகளில் இருவர் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டவரா யிருக்கவேண்டுமென்றும் மறுபடியும் அறிவித்துள்ளார். இவ்விஷயம் சினேட் சபையால் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது' என்று காசிச் செய்தி ஒன்று கூறுகின்றது.

***

இப்பொழுது இரவீந்திரநாததாகூர் லண்டனில் இருக்கின்றார் என்றும், இம்மாதம் 29ந்தேதி இந்தியாவிற்குப் பிரயாணமாவார் என்றும் லண்டன் செய்தி கூறுகின்றது.

***

சென்னைச் சைவ ஸமாஜத்தின் 25-வது வருஷ விழா சென்ற வாரம் சென்னை பச்சையப்பன் கலாசாலை மண்டபத்தில், திருவாளர் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் தலைமையில் கூடிற்று. தலைவர் முன்னுரை முடிந்ததும், இலங்கைப் பெரியார் ஸர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் மரணத்தைக்குறித்து அனுதாபமொழி சில கூறப்பட்டது. பின், ஸ்ரீமான் சிதம்பரநாத முதலியார் 'சைவர்துலங்கும் தமிழ்' என்னும் விஷயமாய்ப் பேசினர்.

அதன்பின் காவித்தண்டலம் திருவாளர் வேதாசல முதலியார் 'பஞ்சாக்கரம்' என்னும் பொருள்பற்றிப் பேசுகையில், பஞ்சாக்கரத்தின் வரிவு இன்னது, அதன் மகிமை இன்னது இன்னது என்பதைக் கூறித் திருவைந்தெழுத்தே இருவினையால் மும்மலங்களுக்குக்கட்டப்பட்டு வீழ்த்தப்பட்ட பிறவிப்பெருங்கடலினின்று மதப்புதற்கான தெப்பம் என்பதை "அஞ்செழுத்தின் புணைபிடித்து" என்று மணிவாசகப்பெருமானின் மலர்ச்சொற்களை மேற்கோளாகக் காட்டித்தம் அருஞ் சொற்பொழிவை முடித்தனர்.

தலைவர் அதன் பின் எழுந்து தம் கருத்துரைகளை உரைத்து அன்றைய கூட்டத்தை முடித்தனர் என்று ஒரு நிருபர் அறிவிக்கின்றார்.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

இனம்! இனம்!!

வைத்திய வித்தியா

யெளவனம் என்னும்பொக்கிஷத்தையும்ஆரோக்கியமென்னும் குன்றாத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துச் சுகமடையலாம்.

மதனமஞ்சரி பார்மஸி,
1/94, சைனா பஜார், மதராஸ்.

அறிக்கை.

கலாநிலயத்தின் முதல் மூன்றாண்டு பைண்ட் புத்தகங்கள் மிகச் சிலவே இருக்கின்றன. வேண்டுவோர் விரைவில் வருக.

கலா நிலயம் ஆபீஸ்,
வேளாளர்தெரு, புரசைபாக்கம், சென்னை

பி. வி. ராஜன் பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம் வாசனைகளால் மேன்மையுற்றது. நெ. 1 ஸ்பெஷல் ரகம் பொடி-வீசை ரூ-4. ஷை சாதா ரகம் பொடி வீசை ரூபா $3\frac{1}{2}$.

டாக்டர் B. S. மல்லையா
M. B., & C.M., & M.L.C.
அவர்கள் பரிசோதித்த
R.S. சுகந்த மூக்குத்தூள்

விலை பாட்டில் 1-க்குஅணா 4. டஜன் ரூபா $2\frac{1}{4}$ ஷை ஒரு சேர்டின் ரூபா $1\frac{3}{4}$ வி பி. ரயில் சார்ஜ் வேறு.

பி. வி. ராஜன் அண்டு கம்பெனி,
நெ. 44 கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.
தந்தி விலாசம் "நஸ்யம்"

Estd. **NATIONAL** 1906
INSURANCE COMPANY LIMITED.
Head Office: **-9, Old Court House St., Calcutta.**

Before taking out a life assurance policy it is better to apply all the rigid tests for a good company.

The "National" will surpass any other Company in these tests.

(1) Indian Capital-Indian Management-for the benefit of Indians.
(2) The Company has never contested a claim on a technicality.
(3) The low safe rates of premium provide maximum assurance at minimum cost.

The "National" keeps well ahead of the times and its policy of 'fair and square dealing' which began with its founding, ever since 1906, has been continuous.

For Particulars & Agency terms.
Apply to:— R. G. DAS & CO., *Managers.*
T. ANANTACHARI, B.A.,
Branch Secretary.
NATIONAL INSURANCE COMPANY LTD.,
Madras Branch, Loane Square,
Broadway, Madras.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணா 12.

கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரையும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

ஏமாங்கதத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரிசெய்த சிறந்த மொழிபெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந் நாவல்நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை ரூ. 1-8.

விலாசம்:—கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)